80

தொகுதி 9.] 1930ஹு ஏப்ரல்மீ 1உ [பகுதி 3.

# மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



13 MAY 19

பிரசுரகர்த்தா
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென் ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஆு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி என்ற நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரி இரகசியம் 3-ம் பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| அமராவதி 2 பாகமும் | ரூ. | 4 | 0 | |
| பவளத்தீவு 2 பாகமும் | ரூ. | 3 | 0 | |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | ரூ. | 9 | 10 | 0 |
| அர்ஜுனஸிங், சுந்தர் | ,, | 0 | 2 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் | | 1 | 12 | 0 |
| கற்பகச்சோலையின் அற்புதக்கொலை | ரூ. | 1 | 4 | 0 |
| கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் | ,, | 3 | 4 | 0 |
| இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் | ,, | 2 | 0 | 0 |
| இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம் | ,, | 1 | 12 | 0 |
| சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி | ,, | 2 | 0 | 0 |

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

MAY 1930 MADRAS

மதனவல்லி சபையை நோக்கி,

"கௌரவம் பொருந்திய இளவரசரே, பிரபுக்களே, மற்ற நண்பர்களே! நீங்களனைவரும் இதுகாறும் என்மேல் கூறப்பட்ட அபாண்டமான குற்றத்தைச் சாட்டக் கேட்டீர்கள். இப்போது கருணைபுரிந்து நீதிப்படி அடியேன் வாக்குமூலத்தையும் கேட்கும்படி பிரார்த்திக்கிறேன்" என்றாள்.

இளவரசன் அவளை நோக்கி, "ஆகா! தடையின்றி" என்று கூறிவிட்டு சுகசிங்கம் பிரபுவை நோக்கி, "பிரபுவே! தாங்கள் இப்போது இந்த நியாயசபையின் அக்கிராசனாதிபதியா யிருக்கிறீர். இம்மாதால் தங்கள் மனதிற்கு ஏதாவது வருத்தம் நேரிட்டிருந்தாலும் இப்போது தாங்கள் அதைக் கருதாமல் நியாயத்தை யனுசரித்து நடப்பீர் என்று பூரணமாய் நம்புகிறேன்" என்றான்.

இதைக்கேட்டதே மாரப்பனுக்குப் பின்னும் இடி விழுந்தது.

சுக:—"ஆகா! சந்தேகமின்றி யாவரும் உட்காருங்கள். காப்டன் கபுர் கிருஷ்ணன்!" என்றார்.

பிரபு மதனவல்லியின் கம்பீரத் தோற்றத்தைக் கண்டதே அவளிடம் தான் தோல்வியும் அவமானமுமடைந்ததை யடியோடு மறந்துவிட்டார். நியாயப்படி நடக்க வேண்டுமென்று தனக்குள் தீர்மானம் செய்துகொண்டார்.

கபுர் கிருஷ்டன் அங்கிருந்த ஒரு மேஜையினெதிரில் உட்கார்ந்து, அம்மேஜையிலிருந்த சாராய வகைகளைத் திருப்தியாய்ப் பருகி அங்கிருந்த ஆகார வகைகளைத் தாராளமாய்ப் புசித்துகொண்டிருந்தான். பிரபு கூறியதற்கு அவன், "பிர



186544.

புவே! கூறுங்கள் நான் இத்தகைய வேலையிலிருக்கும்போது யாவும் என் செவிகளுக்கு நன்ருய்க்கேட்கும்'' என்ருன்.

பிரபு செல்லப்பனை நோக்கி, "உன் மனைவியை யருகில் உட்கார வைத்துக்கொள்'' என்ருர்.

அதன்பிறகு பிரபு மதனவல்லியை நோக்கி, "இனி நீ யுன் சமாசாரத்தைக் கூறலாம்'' என்ருர்.

மதன:—"பிரபுவே! நான் கூறுவது கொஞ்சமே. மாரப்பன் என்மேல் கூறிய தவ்வளவும் அடியோடு பொய். மிக்க அக்கிரமமான பெரிய அபாண்டமே. முழுதும் அசத்தியமே. இவ்வளவே நான் கூறவேண்டியது. மற்ற விஷயங்களை நடத்தவேண்டியது என் கணவனுடைய கடமையாகையால் இனி யவரே பேசுவார்'' என்ருள்.

செல்:—"முதலாவதாய் என் மனைவிக்கும் மாரப்பனுக்கும் வாதநாயகிச் சீமாட்டியின் தோட்டத்தில் நடந்த சம்பாஷணையைப்பற்றி கபுர் கிருஷ்ணனுக்கு ஏதாவது தெரிந்திருந்தால் அதைக் கூறும்படி கோருகிறேன்'' என்ருன்.

கபுர் கிருஷ்ணன்:—ஆகா தடையின்றி நடந்தது நடந்தபடி கூறுகிறேன். மாரப்பன் இம்மாதை யங்கு சந்தித்ததாய்க் கூறிய அதே புதவாரம் இரவு நானும் என் மனிதன் எச்சனும் வரதநாயகிச் சீமாட்டி மாளிகையிலுள்ள தோட்டத்தின் வேலிகளில் மறைந்திருந்தோம். நாங்கள் ஏன் அன்று அங்கிருந்தோம் என்ற காரணத்தைப் பற்றி அவசியமில்லை. அங்கிருந்தோம் என்பது உண்மை. (அச்சமயம் கிருஷ்ணன் குமாரவேல் பிரபுவைக் குறிப்பாய் நோக்கினன். ஏனெனில்

அவர் கட்டளைப்படி மதனவல்லி எங்கு சென்றாலும் அவர் நடக்கைகளை வேவு பார்க்கவேண்டுமென்றே அவன் அங்குசென்றவன்.) மாரப்பன் கூறியபடி இவர்கள் தோட்டத்தில் உலாவச்சென்றதும் சம்பாஷித்ததும் உண்மையே. இந்தம்மாள் கூடவிருந்த மாதர் இருவரும் தூரத்தில் போய்விட்டதும் உண்மையே. பிறகு இவர்களிருவரும் பேசத் தொடங்கியபோது மாரப்பன் எவ்வளவு அதிக சினேகம்காட்டிப் பேசத் தொடங்கினனோ அவ்வளவுக் கவ்வளவு இந்தம்மாள் கோபத்தோடும், வெறுப்போடும், அலட்சியத்தோடும், தீரத்தோடும் பேசத்தொடங்கினள். பிறகு மாரப்பன் இந்தம்மாளைப்பற்றி யொரு சதியாலோசனை நடந்திருப்பதாயும், தன் சொந்த நண்பர்களே யதில் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் கூறினன். பரம துஷ்டர்களாகிய சில காமதூர்த்தர்கள் இந்தம்மாளுடைய காதலைப் பெறப் பந்தயம் போட்டுக்கொண்டிருக்கிறார்களென்று கூறினன். இதே வார்த்தைகள் இவனல் கூறப்பட்டன. அச்சமயம் செடிகளில் ஏதோ சந்தடிகேட்டு மாரப்பன் திடுக்கிட்டு பயந்தான். அதன்பிறகு மாரப்பன் இம்மாதை நெஞ்சு திடுக்கிடத்தக்க வார்த்தைகளால் பயமுறுத்தத் தொடங்கினன். அவ்வார்த்தைகளைக் கேட்டபோது எனக்கு மயிர்க்கூச்சுண்டாயிற்று. இந்தம்மாள் தன் பிரியத்திற் கிணங்காவிட்டால் தன்னல்கூடிய முயற்சிகளெல்லாம் எடுத்துக்கொண்டு இவள் மரியாதையை யடியோ டழித்து விடுவதாகவும் ஒவ்வொருவரிடமும் இம்மாது தனக்கு இணங்கிவிட்டதாக இரகசியமாய் அவர்கள் நம்பும்படிகூறி இவளை யடியோ டழித்து விடுவதாகவும், அவசியமாயின் அதை ருசுப்படுத்த கள்ளக் கையொப்பமிட்ட அத்

சாட்சி பத்திரம்கூட சிருட்டிக்கத் தன்னால் கூடுமென்றும், இந்தம்மாள் யோசித்துத் தனக்கு அனுகூலமான பதில் அளிப்பதற்காக இரண்டு வாரங்கள் தான் தவணை கொடுப்பதாகவும்..." என்றபோது சுகசிங்கம் பிரபு,

"கபுர் கிருஷ்ணன்! போதும் போதும். இம்மகா கொடுமையான அக்கிரமச் சொற்கள் மறுபடி இம்மாதின் செவிகளில் விழுந்து இவள் மனதைப் புண்படுத்த இடந்தருவது அனுவசியம். இவ்வளவே போதும்" என்றார்.

கபுர் கிருஷ்ணன் ஆளாகிய எச்சன் அச்சமயம் வெளியில் சென்றான்.

சுகசிங்கம் பிரபு மேற்கண்டவாறு கூறியதே இளவரசன் அவரை நோக்கி "ஆம். தாங்கள் ஒருபோதும் அத்தகைய விஷயத்திற்கு இடந்தரலாகாது. கபுர் கிருஷ்ணன்! உட்கார்ந்து இன்னும் கொஞ்சம் சாராயம் அருந்து" என்றான்.

கிருஷ்ணன் உடனே, சொன்னது போதுமென்று, உட்கார்ந்துகொண்டு தன் இஷ்டப்படி குடிக்கவும் ஆகாரங்களை யருந்தவும் தொடங்கினன். அவன் எங்நேரம் அதே வேலையிலிருந்தானே தெரியாது. ஆனல் அதற்குள் அங்கிருந்து வெளியிற் சென்ற எச்சன் அத்தாட்சி பத்திரம் அளித்த கௌரியை யழைத்துக்கொண்டு அறைக்குள் வந்தான்.

நேயர்களே! மதனவல்லி யங்கு வந்ததையும், அவள் கூட கபுர் கிருஷ்ட்டனையும் கண்டதே மாரப்பனுக்கு இடி விழுந்து ஆவி சோர்ந்துவிட்டதென்று முன்னமே கூறினோம். இப்போது தனக்குச் சாட்சிப் பத்திரம் கொடுத்த

தாய்த் தான் கூறிய அம்மூதாட்டியே அங்கு வந்துவிட்டதைக் கண்டதே அவனுக்குண்டான திகிலும் மனச் சோர்வும் இவ்வளவென்று சொல்லமுடியாது அப்போதுதான் "அய்யோ! கடவுளே! நாமேன் இம்மாதிரி செய்தோம்?" என்று அவன் மனதிற் பட்டது.

உடனே தன் அபாண்டமான பொய்களனைத்தும் இப்போது வெளிவந்துவிடு மென்றும், இனி தனக்கு அகௌரவமும் அவமானமுமே நேரிடுவது நிச்சயமென்றும் அத்துஷ்டன் மனதிற் பட்டுவிட்டது. ஆகையால் அவன் இடிவிழுந்து முகம் வெளுத்து ஆவி சோர்ந்தது. அவன் ஒன்றும் பேசமுடியாமல் நாற்காலியிற் சாய்ந்துவிட்டான். அவன் மன முடைந்துவிட்டது.

கௌரி மூதாட்டி அவர்கள் எதிரில் நின்றபோது மிக்க திகிலும் நடுக்கமும் கொண்டாள். எச்சன் கபுர் கிருஷ்ணன் செவிகளில், "இவள் சுலபத்தில் வரமாட்டேனென்றாள். கடைசியில் ஒரு சேவகனை யழைத்து வருவதாய்ப் பயப்படுத்திய பின்பே வந்தாள்" என்று குசுகுசுவென்று கூறினான்.

அம்மூதாட்டி விசாரிக்கப் பட்டபோது மிக்க கஷ்டத்தின்மேல் பயத்தோடு நடுங்கிக்கொண்டே கடைசியில் கீழ்க்கண்டபடி கூறினாள். "எனக்கு உண்மையில் இச்சங்கதியைப் பற்றி யொன்றும் தெரியாது. எனக்கு மாரப்பன் ஐந்நூறு ரூபாய்க்குமேல் கடன் கொடுக்கவேண்டும். நான் இக்கடிதத்தை யெழுதிக் கொடுத்தால்தான் அப்பணத்தைக் கொடுப்பதாய்க் கூறினான். அதனால் நான் எழுதிக் கொடுத்துவிட்டேன். உண்மையில் இம்மாது ஒரு விநாடிகூட எப்போதும் என் வீட்டிற்கு வந்ததேயில்லை. இதுவே யுண்மையென்று நான் சத்தியம் செய்கிறேன்" என்றாள். அதன்

பிறகு அவள் வீட்டிற்குச் செல்லும்படி யனுமதி யளிக்கப் பட்டாள்.

அவள் அறையை விட்டுச் சென்ற மறுவினடி மாரப் பன் வேலைக்காரன் வந்து அவனை நோக்கி, "ஒரு மிக்க அவ சியமான விஷயத்தைப் பற்றித் தாங்கள் கொஞ்சம் வர வேண்டும்" என்று மாரப்பனை யழைத்தான்.

சுகசிங்கம் பிரபு மாரப்பனை நோக்கி "நீர் சென்றாலும் உடனே திரும்பிவந்துவிட வேண்டும்." என்றார்.

கர்னல் மாரப்பன் சோர்ந்த குரலோடு அப்படியே யென்று கூறிக்கொண்டே சென்றான். ஆனால் அவனுடைய மனமோ தூக்கிற் போடப்பட்ட மனிதன் நிலைமையைவிட அதிக திகிலில் இருந்தது.

கர்னல் மாரப்பன் அறையை விட்டுச் சென்று முன் பக்கமிருந்த கூடத்தில் சென்றதும் அங்கு தனக்காகக் காத் திருக்கும் இரண்டு ஆசாமிகளைக் கண்டான். அவர்கள் முகத்தைக் கண்டதே அவர்கள் வந்த விவகாரம் இன்ன தென்று அவன் மனதிற் பட்டுவிட்டது. அவர்களில் ஒரு வன் மாரப்பன் போன்ற ஆசாமிகளுக்கு நூற்றுக்கு இரு பது முப்பது வட்டி வீதம் டிஸ்கவுன்டுக்குக் கடன் கொடுக் கும் ஈவிரக்க மில்லாத ரொக்கலேவாதேவி செய்யும் வர்த் தகன்; அவன்கூட வந்த தடித்த மனிதன் அணிந்திருந்த உடையாலும் மற்ற விஷயங்களாலும் அவன் கோர்ட் அமீனவென்று யாருந் தெரிந்துகொள்ளலாம். அவன்கூட அவனுக்குதவியாய் ஒரு சேவகன் வந்திருந்தான். அமீன மாரப்பனை நோக்கித் தன் மடியிலிருந்த ஒரு கடிதத்தை யவன்முன் காட்டி, "இது ஒரு வாரன்ட், இதோ விருக்கும் இவ்வர்த்தகருக்குச் சேரவேண்டிய சொல்ப தொகைக்காக

இது பிறந்தது" என்று கூறிவிட்டுத் தன் ஆளை நோக்கி "கதவண்டைச் சாக்கிரதையா யிரு" என்றான்.

மறுபடி மாரப்பனை நோக்கி "ஐயாயிரம் ரூபாய், கூட வட்டி, கோர்ட்டுச் செலவு, என் செலவு யாவும் இருக்கின்றன. என் வீடு பெரியதெருவி லிருக்கிறது" என்றான்.

தன்மேல் கடனுக்காக வாரன்ட் வந்திருப்பதை யறிந்த மாரப்பன் பேரிடி விழுந்தவன்போல் ஆவி சோர்ந்து நாற்காலியில் சாய்ந்துவிட்டான்.

கபூர் கிருஷ்டன் கூடத்தின் கதவின் பின்னாலிருந்து நடந்த சம்பாஷணை யனைத்தும் கேட்டான். அவன் மிக்க ஆவேசத்தோடு "ஆ! மாரப்பன் சிறைச்சாலைக்குக் கொண்டு போகப்படப் போகிறான். செய்திருக்கும் மகா அக்ரகிமமான குற்றத்திற்குத் தக்க தண்டனை யடையாமல் அவன் போகக்கூடாது" என்று கூறிக்கொண்டே போஜன அறையை விட்டு மாரப்பனும் கடன்காரன் அமீனா முதலியவர்களுமிருக்கும் அறைக்குள் பாய்ந்து சென்று, மாரப்பன் சிகையைப் பற்றிக்கொண்டு "அடே கேக்மாறிப் பயலே! உன்னைப்போன்ற பாம துஷ்டனாகிய அக்கிரமஸ்தனை நான் கண்டதே யில்லை. நீ செய்தது எப்படிப்பட்ட அக்கிரமச் செய்கை? ஆகையால் இந்தா இதை வாங்கிக்கொள். இதை—இதை—இதை—இதை...என்று அவனுடைய முகத்திலும் கன்னங்களிலும் படபடவென்று குத்துகளும், பக்கங்களில் பலமான உதையும் விடவே மாரப்பன் குய்யோ முறையோவென்று அலறினான். அவனைப் பிடித்த பிடியைத்தட்டென்று விட்டு விட்டு கபூர் கிருஷ்டன் கடைசியாய் ஓங்கி யொரு உதை விட்டான். மாரப்பன் வீறிட்டுக்கொண்டு அறையின் ஒரு மூலையில் பந்துபோற் போய்த் தடாலென்று விழுந்தான்.

கபுர் கிருஷ்ணன் போஜன கூடத்திலிருந்து அதிவேகத்தோடு புறப்படும்போதே மதனவல்லி தவிர மற்றபேரனை வரும் எழுந்துபோய் மாரப்பன் இருக்கும் அறையின் வாசற்படியில் நின்றுகொண்டு நடந்த விசேஷத்தைக் கண்டு கலகலவென்று நகைத்தார்கள். கபுர் கிருஷ்ணன் அங்கிருந்து திரும்பியபோது அவர்களும் சென்று தங்கள் தங்கள் ஆசனத்தி லமர்ந்தார்கள். மாரப்பன் சென்று தன் ஆசனத்தி லமர்ந்து ஒரு விசேஷமும் அறியாதவன்போல் எதிரில் மேஜைமேலிருந்த சாராய வகைகளையும் ஆகார வகைகளையும் அருந்தத் தொடங்கினன்.

அதன் பிறகு மாரப்பன் மனமுடைந்து சொல்லொணு அவமான மடைந்து சிறைக்குக் கொண்டுபோகப் படும்போது, சுகசிங்கம் பிரபு சபையிலுள்ள தமது நண்பர்களை நோக்கி,

"இனி நாம் நமது விவகாரத்தை முடித்துக்கொண்டு இத்தகைய பாம சண்டாளனுகிய கள்ளப்பயலின் வீட்டை விட்டுத் துரிதமாய் வெளிச் செல்வோம்" என்றூர்.

யாவரும்:—"ஆம் ஆம்" என்றூர்கள்.

பிரபு:—நண்பர்களே! இப்போது ஒரு பெரிய அபாண்டமான அக்கிரமம், வெறும் பொய்யென்று ருசுப்படுத்தப்பட்டது. இன்னும் அதற்கு அத்தாட்சி வேண்டுமாயின் நானும் இளவரசரும் கூற ஆயத்தமா யிருக்கிறோம். அதாவது மாரப்பன் கூறிய அதே வெள்ளிக்கிழமை அதே இரவு ஒன்பது மணிக்கும் பதினேருமணிக்கும் இடையில் இம்மாது என் வீட்டிற்கும் இளவாசர் மாளிகைக்கும் வந்திருந்தாள். ஆனல் அவளைப்போல் "இம்மாதின் காதலைப் பெற்றேமென்று

நாங்கள் அசத்தியம் கூறமாட்டோம்." என்று புகன்ருர்.

மதனவல்லி அப்போதுதான் நிம்மதியும் சந்தோஷமுமான மனதோடு பிரபுவை நோக்கி "பிரபுவே! தாங்கள் எள்ளளவும் பாரபட்ச மின்றி, நட்பென்றும், விரோதமென்றும் கருதாமல் சத்தியத்தை யனுசரித்து கூறிய தீர்ப்பிற்காக நான் மிக்க வந்தன மளிப்பதோடு இந்நன்றியை யென்றும் உயிருள்ள வரையில் மறக்கமாட்டேன். நான் ஒன்று மட்டும் கூறுகிறேன். அதற்காக என்னை மன்னிக்கும்படி தங்களை வேண்டிக்கொள்கிறேன். அதாவது, தாங்கள் இன்னொரு தரம் இத்தகைய விவகாரத்தில் பிரவேசிக்கும்போது உங்களோடு கூட எப்படிப்பட்ட நண்பர்களைச் சேர்த்துக் கொள்கிருேமென்பதைக் கவனித்துச் செய்யுங்கள். ஏனெனில் இந்த மாரப்பன் என்ற ஆளைப்போல் யாரையாவது சேர்த்துக்கொண்டால் முடிவில் அவமானமே நேரிடும்" என்ருள்.

மதனவல்லி யவ்வாறு கூறியதும் அறையைவிட்டு வெளி கிளம்பினுள். அவள் வாசற்படியைக் கடந்ததே இளவாசன் அவள் பின்னுல் ஓடிவந்து "ஓ! என் தேவகன்னிகையே! நமது ஒப்பந்தத்திற்கு இடையூறு ஒன்றுமில்லையே?" என்ருன். மதனவல்லி "ஒன்றுமில்லை. அடுத்த திங்கள் இரவு ஒன்பதுமணிக்குத் தங்கள் மாளிகைக்கு வருவேன்" என்று கூறிவிட்டுச் சென்ருள்.

இளவரசன் தன் சந்தோஷத்தை யடக்கமுடியாமல் சாமார்த்தியத்தோடு சென்று தன் ஆசனத்திலமர்ந்தான். அச்சபையின் அக்கிராசனதிபதியாகிய சுகசிங்கம்பிரபு யாவரையும் நோக்கி,

"இன்னும் ஒரு விஷயத்தைப் பற்றியே முடிவுசெய்ய வேண்டும். அதாவது இப்பந்தயத்தொகை நியாயப்படி

யாருக்குச் சேரவேண்டு மென்பதே. அதைப்பற்றி என் மன தில் சற்றும் சந்தேகமில்லை. மதனவல்லியின் காதலைப் பெற்று அவளை மணம்புரிந்து கொண்ட அவள் கணவ னுக்கே அப்பணம் சேரவேண்டும் என்பதே என் அபிப் பிராயம்'' என்ருர்.

யாவரும் அவ்வாறே ஒப்புக்கொள்ளப் பரிசுப்பணம் உடனே செல்லப்பனுக்கு அளிக்கப்பட்டது. செல்லப் பன் "நண்பர்களே! நீங்கள் இவ்விஷயத்தில் மிக்க நியாய மாய் நடந்து கொண்டதைப்பற்றி நான் மிக்க நன்றியுடைய வனு யிருக்கிறேன். எனக்குப் பிரியமான மனைவி கிடைத்த தோடு பணமும் கிடைத்தது மிக்க சந்தோஷமே. ஆயினும் நமது நண்பராகிய கபுர் கிருஷ்ணன் இத்தொகையை யங்கீ கரித்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோரிக்கொள் கிறேன்'' என்ருன்.

கபுர் கிருஷ்ணன் மிக்க நாணயமான வார்த்தைகளால் செல்லப்பனுக்கு மிக்க வந்தனமளித்து "மிக்க அருமையான நண்பர் சந்தோஷத்தின்மேல் பரிசாயளிப்பதை மிக்க அன் போடும் நன்றியோடும் வந்தனத்தோடும் ஏற்றுக்கொள்ளா விட்டால் நான் மிக்க இழிந்த குலஸ்தவனுகவே மதிக்கப் படுவேன்'' என்ருன்.

முடிவில் நண்பர்கள் யாவரும் சந்தோஷத்தோடு ஒரு வர்க்கொருவர் வந்தனமளித்து அவரவர்கள் மனைக்கேகத் தொடங்கினுர்கள். செல்லப்பன் தனக்காக வெளியறையில் காத்துகொண்டிருக்கும் தன் மனைவியை யழைத்துகொண்டு சந்தோஷத்தோடு சென்ருன். போகும்போது சதிபதிகள் இருவரும் மாரப்பனிடமிருந்த பிரதம வேலைக்காரனை யழைத்து நாளைக்கே தங்கள் குடும்பத்தில் வந்து வேலைக் காரனுய்ச் சேரும்படி வாக்குத் தத்தத்தின்படி கூறிவிட்டுச்

சென்றார்கள். அவன் அவ்வாறே மறுநாள் போய்ச் சேர்ந்து கொண்டானென்று நாம் கூறுவது அனுவசியமே.

மறுநாட் காலை மாரப்பன் மனைவி தன் சுற்றத்தாரைப் பார்க்கச் சென்றவள் மனைக்குத் திரும்பி வந்ததும் தன் கணவனுக்கு நேர்ந்த மிக்க மானக்கேடான சம்பவத்தையும் கடைசியில் அவன் கடன்காரர் சிறைச்சாலைக்குக் கொண்டுபோகப்பட்டதையும் கேட்டுத் துயரக்கடலில் ஆழ்ந்தாள்.

---

## 59-வது அத்தியாயம்.

முன் அத்தியாயத்தில் கூறிய சம்பவம் நடந்த மறு தினம் நியாயசபையில் தேவாாயன், அதாவது சுகசிங்கம் பிரபுவின் சகோதரன் புதல்வியாகிய தெய்வயானையின் கணவனுடைய குற்றம் விசாரணைக்கு வந்தது.

அதாவது சந்திரன் என்பவனை அவன் விருந்து நடந்தவிடத்தில் கொன்றுவிட்ட குற்றத்தைப்பற்றி விசாரணையாரம்பமாயிற்று. தெய்வயானையும் நீதிச்சபைக்கு வந்திருந்தாள். ஆனால் மறைவான ஒருவிடத்தில் உட்கார்ந்திருந்தாள்.

விருந்துவைத்த பெரிய மனிதரும், அப்போது அங்கிருந்த இரண்டு மூன்று பெரிய மனிதர்களும் விசாரிக்கப்பட்டார்கள். அதனால் கீழ்க்கண்டபடி ருசு ஏற்பட்டது.

“அப்பெரிய மனிதர் வீட்டில் விருந்து நடந்தபோது தேவாாயனுக்கும் சந்திரனுக்கும் நடந்த சம்பாஷணையில் சச்சரவு உண்டாகிக் கடைசியில் இருவரும் அதேவிடத்தில் துப்பாக்கியால் சண்டையிட வேண்டுமென்றும் ஏற்பாடு

செய்துகொண்டார்கள். அதற்கு நடக்கவேண்டிய சடங்கின்படி, இருவரும் கையில் துப்பாக்கிகளை யெடுத்துக் கொள்ளவேண்டியதென்றும், மத்தியஸ்தர்கள் இருவரும் சுடலாமென்று கூறி ஒன்று, இரண்டு, மூன்று என்று கூறியதே, அதாவது மூன்று என்று கூறியபின்பே இருவரும் ஒருவரை யொருவர் சுடவேண்டியதென்றும் ஏற்பாடு. ஆனால் இருவர் கரங்களிலும் துப்பாக்கிகள் கொடுக்கப்பட்டதே, மேற்கண்ட சமிக்கை கூறத்தொடங்கு முன்பே தேவராயன் சந்திரனைச் சுட்டுவிட்டான். சந்திரன் ஓவென் றலறி தள்ளிப் பூமியில் விழுந்து மடிந்தான். ஆகையால் இவன் தவறுய்ச் சுட்டவனல்ல; வேண்டுமென்றே அவனைக் கொன்றான்."

இத்தகைய ருசு ஸ்தாபிக்கப்பட்டதும் இரு கட்சி வக்கீல்களும் தங்கள் கடமைப்படி வாதித்தார்கள். கடைசியில் நியாயாதிபதி தேவராயன் பிரபு வமிசத்தில் மணம்புரிந்து கொண்டவனுதலால் தம்மால் கூடியவரையில் அவனுக்கு அனுகூலமான சாட்சியங்களை அதிகப்படுத்தி உறுத்தியும் பிரதிகூலமானவற்றை மிக்க அலட்சியமாகவும் ஜூரிகளுக்கு எடுத்துக் கூறினர். ஜூரிகளோ உண்மையைக் கவனித்து,

"தேவராயன் வேண்டுமென்றே சந்திரனை அக்கிரமமாய்க் கொலை செய்தான். ஆகையால் அவன் கொலை செய்த குற்றவாளியே" என்று தீர்ப்பு கூறினர்கள்.

அதன்மேல் நியாயாதிபதி வேறு விதியின்றி "குற்றவாளியே. நீ கொலைக்குற்றம் செய்ததாய் ருசுவாகிறபடியால் நீ உயிர் நீங்கும் வரையில் தூக்கில் போடப்பட வேண்டும். ஆண்டவன் உன் ஆன்மாவைக் காப்பாற்றுவாராக" என்று தீர்ப்பளித்தார்.

அதைக் கேட்டதே தேவராயன் ஆவி சோர்ந்து அவதிப்படவில்லை. ஏனெனில் எப்படியாயினும் இளவா

சன் நமக்குப் பூரண மன்னிப்பளிக்க வேண்டி கடமைப் பட்டிருக்கிறான் என்ற நம்பகம் அவனுக்குண்டு. அவன் தீர்ப்பளிக்கப்பட்டதே மறுபடி சிறைச்சாலைக் கனுப்பப்பட்டான். அவன் மனைவியாகிய தெய்வயானை தன் கணவனுக்கு என்ன தீர்ப்பளிக்கப்படுமோ என்று பெருந்திகில் கொண்டவள்போல் சிறைச்சாலையில் ஒரு அறையில் உட்கார்ந்து முடிவான சங்கதியை யெதிர் பார்த்துக்கொண்டிருக்கிறாள்.

தேவராயன் மரண தண்டனை யடைந்து மறுபடி சிறைச்சாலைக்குக் கொண்டுவரப் பட்டதே சிறைச்சாலை யதிகாரி, தெய்வயானை பெரிய பிரபு வமிசத்தில் சேர்ந்தவளானதால், மிக்கமரியாதையோடும் அச்சத்தோடும் அளிக்கப்பட்ட தீர்ப்பை யவளிடம் மெதுவாய்க் கூறினார். தெய்வயானை அத்தகைய முடிவையே மிக்க ஆவலோடு எதிர்பார்த்திருந்தாளேனும் உடனே பேரிடி விழுந்து ஸ்மரணை யற்றுப் பூமியில் விழுந்துவிட்டவள்போல் பாசாங்கு செய்தாள். பிறகு அவள் தன் கணவனைச் சந்தித்து செய்த மிக்க சாமார்த்தியமான பாசாங்கினால், தேவராயன் அவளைப் பூராய் உண்மையானவளென்று நம்பிக்கொண்டு மிக்க மெச்சிக்கொண்டு "எப்படியும் நீ இளவரசன் என்னைப் பூரணமாய் மன்னிக்கும்படி செய்வாயல்லவா?" என்றான்.

தெய்வயானை "அது எனக்கு நம்பகமெனினும், இத்தகைய பயங்கரமான தீர்ப்பைக் கேட்டதே என் ஆவி சோர்ந்துவிட்டது. மன்னிப்பிற்கு ஒரு சந்தேகமுமில்லை." என்று அவன் மனம் பூரண நம்பிக்கை யடையும்படி தேறுதல் கூறித் தான் மறுநாளே இளவரசனைக் கண்டு இதைப் பற்றி முடிவு செய்துக்கொண்டு சிறைச்சாலைக்கு வந்து சங்கதி கூறுவதாக வாக்களித்து விட்டு சிறைச்சாலையை விட்டுப் புறப்பட்டாள்.

அவள் அங்கிருந்து வெளிவந்து வண்டியிலேறித் தன் பெரிய தந்தையாகிய சுகசிங்கம் பிரபுவின் மாளிகையை நோக்கிச் செல்லும்போது "சரி, இப்போது இவன் நம்மேல் எள்ளளவும் சந்தேகப்படவில்லை. நம்மையே பூராய் நம்பியிருக்கிறான். கடைசி வரையில் இவனை யேமாற்றிவிட வேண்டும். அப்பத்திரத்தை யெக்காரணத்தாலும் நம் கைவிட்டுப் போகவிடலாகாது. நமது எண்ணம் ஈடேறத் தடையே யில்லை" என்று தனக்குள் சிந்தித்துக்கொண்டே சென்றாள்.

அவள் பிரபுவின் அரண்மனை வந்து சேர்ந்ததே தன் பெரிய தந்தை மரகதவல்லி யம்மாளோடு சம்பாஷித்துக் கொண்டிருக்கிறார் என்று அறிந்தாள். அவர்கள் ஆசாரப்படி அம்மாது சென்றபிறகே தெய்வயானை தன் பெரிய தந்தையைச் சந்தித்துப் பேசலாகும். மரகதவல்லி தன் புத்திரிகளை இளவரசியிடம் அனுப்பியிருக்கும் சதியாலோசனை விஷயத்தைப்பற்றி தெய்வயானைக்கு ஒன்றுமே தெரியாது.

பிரபுவும் அவளும் சுமார் ஒருமணி நேரம் பேசியபிறகு மரகதவல்லி விடைபெற்றுக்கொண்டு சென்றபின் தெய்வயானை தன் பெரியதந்தையிடம் போய்ப் பேசினாள். பிரபு அவள்கூறிய சங்கதிகளைக் கேட்டதும் "சரி, உன் நோக்கப்படி எல்லா விஷயங்களும் நிறைவேறும்" என்றார்.

தெய்வ:—"ஆகா, அதற்குத் தடையில்லை. ஆனால் கடைசி வரையில் நான் அபிநயம் செய்யவேண்டும்" என்றாள்.

பிரபு:—"அப்படிச் செய்ய உன்னால் முடியும். ஆனால் உன் விவகாரத்தை நீயே நடத்திக்கொள்ள வேண்டும். ஏனெனில் நான் ஒரு முக்கியமான அவசர விஷயமாய் உடனே பருதிபுரம் செல்லவேண்டும்: எல்லா ஏற்பாடு

களும் செய்யப்பட்டன. ஒருமணி நேரத்திற்குள் நான் புறப்பட வேண்டும்.'' என்றார்.

தெய்வயானை தன் பெரிய தந்தையை நோக்கி ''அப்படியாயின் தாங்கள் இரவு முழுதும் பிரயாணம் செய்ய வேண்டும்.'' என்றாள்.

சுக:—''ஆம். காலை மூன்று மணி சுமாருக்குத் துறைமுக நகரம் சேர்ந்து சற்று இளைப்பாறி நாளை காலை பத்து மணிக்குப் புறப்படும் படகில் ஏறிப் போகவேண்டும். இனி போஜனத்திற்குச் செல்லலாம்.'' என்றார்.

அவ்வாறே இருவரும் உடனே போஜன கூடத்திற்குச் சென்று போஜன மருந்தினார்கள். அதற்குள் பிரபுவின் பிரயாணத்திற்கு வண்டி ஆயத்தமாய்விட்டது. தெய்வயானையின் செலவிற்கு வேண்டிய பணத்திற்காக தாராளமான தொகைக்கு ஒரு செக் எழுதிக் கொடுத்துவிட்டு பிரபு பிரயாணப்பட்டுவிட்டார்.

தெய்வயானை உட்கார்ந்து கொண்டு தன் வஞ்சம் கடைசி வரையில் நிறைவேறிய விஷயத்தைப் பற்றிச் சிந்தித்துக்கொண் டிருந்தாள். சற்றுநேரங் கழித்து ஒரு வேலைக்காரன் வந்து ''அம்மா! யாரோ ஒருவர் தங்களை முக்கிய விஷயமாய்க் கண்டு பேசவேண்டுமென்று வந்திருக்கிறார்'' என்று கூறினான்.

தெய்வயானை அவனை யழைத்துவா வென்றாள். அவ்வாறே அந்த ஆளை யறைக்குள் விட்டு வேலைக்காரன் சென்றான். தெய்வயானை தலைநிமிர்ந்து பார்த்ததே அவன் சவக்குழி தோண்டிய ஆளேயென்று தெரிந்துகொண்டாள்.

அவனை யறிந்ததே அவளுக்குத் தலைமேல் இடிவிழுந்த மாதிரியாயிற்று. அவள் முகம் வெளுத்தது. அவனைப் பற்

றித் தன் கணவன்கூறியது பொய்யென்றும் அவன் மிக்க அயோக்கியமான இழிந்த மனிதனென்றும் அவள் மனதிற் பட்டது. அவள் மிக்க கஷ்டத்தோடு தன் மனக்கலவா மனைத்தும் ஒருவாறடக்கிக்கொண்டு,

"என்னிடம் என்ன காரியமாய்வந்தாய்?" என்றாள்.

தானப்:—"அம்மா! தங்கள் கணவர் தேவராயர் மிக்க ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறார். ஜாக்கிரதையான பிரயத்தனம் எடுத்துக்கொள்ளாவிட்டால் பிராணபத் தாய் முடியும்" என்றான்.

தெய்வ:—அதைப்பற்றி நீ என்னிடம் என்ன பேசப்போகி றாய்?

தானப்—நான் அவருக்குப் பெரிய உதவிசெய்திருக்கி றேன். களங்கமின்றி கூறுகிறேன். நான்றான் அன்றி ரவு அந்த சவக்குழியைத் தோண்டியவன். இனி இர கசியத்தில் பயனில்லை. நான் தானப்பன்...

தெய்வ:—எந்த தானப்பன்? துரைத்தனக் கொலைஞன?

தானப்பன் ஆம் என்றதே தெய்வயானையின் மனதில் உண்டான வெறுப்பும் துயரமும், தன் கணவன் இத்தகைய மனிதனைச் சிநேகன் என்று கூறினனே வென்ற வியப்பும் மரண வேதனையை யுண்டாக்கிவிட்டன. ஆயினும் என் செய்வது? என்ன விருப்பினும் தன் தலை யெழுத்தென்று மனக்கொதிப்பை யடக்கிக்கொண்டு, "சரி இப்போது அதைப்பற்றி நீ என்னிடம் என்ன கூறவந்தாய்?" என்றாள்.

தானப்:—நான் கூறுவதாவது அவரைச் சிறைச்சாலையி லிருந்து தப்பவைத்து அன்னிய நாட்டிற் போய்ச் சேரும்படி செய்துவிடலாம். இளவரசரையும் சுகசிங் கம் பிரபுவையும் மாயமாய்க் கொண்டுபோன விவகார

மும், மாகதம்மாள் வீட்டில் அன்று இரவு நடந்த கொள்ளைச் சங்கதியும் என் தலைமையின்கீழ் தான் நடந்தது. என்னிடம் மிக்க சாமார்த்தியவான்களாகிய பக்கா ஆசாமிகள் இருக்கிறார்கள். அவர்கள் துணையைக்கொண்டு, என்னிடமிருக்கும் ஜிம்மி, சாவிகள், கன்னக்கோல் முதலிய முதல்தரமான ஆயுதங்களால் அவரைச் சிறைச்சாலையிலிருந்து நான் வெளியில் கொண்டுவந்து விடுவேன்.

இதைக்கேட்டதே எங்கே தன் கணவன் மரணத்திலிருந்து தப்பித்துக்கொண்டு வந்துவிடுவானோவென்று தெய்வயானை திகிலடைந்து விட்டாள். ஆனால் மறுநிமிடம் இவன் சுயநலமின்றி யொன்றும் செய்பவனல்லவென்று சிந்தித்துக்கொண்டு தைரியமடைந்து தந்திரமாய்,

"நண்பரே உமது அன்பிற்காக மிக்க நன்றியுடையவளா யிருக்கிறேன். ஆயினும் நீ சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இப்போதில்லை. ஏனெனில் என் பெரிய தந்தையாகிய பிரபு என் கணவரை பூரணமாய் மன்னித்து விடும்படி இளவரசரைப் பலவந்தப்படுத்தி, அவரை விடுதலையடையச் செய்வார் என்று பரிபூரண நம்பகம் இருக்கிறது. ஆயினும் உன் அன்பிற்காக இந்த ஐந்து சவரன்களையும் எடுத்துக்கொள்" என்று அவனிடம் சவரன்களையளித்தாள்.

அதே விநாடி வேலைக்காரன் வந்து "அம்மா செல்வநாதர் தங்களைக் காணவேண்டி வந்திருக்கிறார்" என்றான்.

தெய்வயானை "அவரைக் கீழ் அறையில் உட்காரவை" என்று கூறிவிட்டுத் தானப்பன் பக்கம் திரும்பினாள்.

---

## 60 - வது அத்தியாயம்.

துப்பறியும் சிங்கமாகிய நமது நண்பன் பெயரைச் கேட்டதே தானப்பன் கருடன் நிழல்பட்ட நாகம்போல் திடுக்கிட் டாவிசோர்ந்து துள்ளியெழுந்தான்.

தெய்வயானை தானப்பனை நோக்கி, "செல்வநாதன் உன்னைத் தொடர்ந்து வந்திருப்பானென்று கருதுகிறாயோ?" வென்றாள்.

தானப்:—"அப்படி யிருந்தால் அவன் தங்களைக்கண்டு பேச வேண்டுமென்று சொல்லியனுப்பமாட்டான். இந்தப் பயல்களின் தந்திரமனைத்தும் நானறிவேன். நான் இங்கிருக்கிறேன் என்று அவன் தெரிந்துகொண்டிருந் தால் உடனே தன் ஆட்களோடு உள்ளே நுழைந்து விட்டிருப்பான். அல்லது வெளியில் பதுங்கி யிருந்து நான் திரும்பி செல்லும்போது பிடித்துக்கொள் வான். அப்படியொன்றுமில்லை; நான் இங்கு வருவ துண்டென்ற சங்கதியை யெப்படியோ அறிந்து பக் குவமாய் உங்களை விசாரிக்க வந்திருக்கிறான். உங்களைப் பற்றி யவனுக்கொரு கவலையுமில்லை. ஆகையால் ஆலசி யம் செய்யாமல் அவனைப்பாருங்கள். இன்றேல் அய்ய மடைவான்" என்றான்.

தெய்வயானை "ஆம் ஆம். அப்படிச் செய்வது மூடத் தனம்" என்று மேஜைமேல் ஐந்து சவரன்களையும் வைத்து "நீ இதை எடுத்துக்கொண்டு துரிதமாய் வீட்டைவிட்டுப் போய்விடு" என்று கூறிவிட்டு அறையைவிட்டு செல்வ நாதன் காத்திருக்கு மறைக்குச் சென்றாள்.

அவள் மனதில் "தன் குற்றம் தன்னைச் சுடும்" என்ற பழமொழிப்படி, தண்ணீர்த் தொட்டியில் அடைபட்டு மரித்து தோட்டத்தில் புதைக்கப்பட்ட தன் காதலன் சங்கதியே செல்வநாதன் வந்தது முதல் கலவரித்துக்கொண்டு இருந்தது. செல்வநாதன் அவளைக் கண்டதும்,

"அம்மா தங்களுக்குத் தொந்திரையளிப்பதற்காக மன்னிக்கவேண்டும். சங்கதியைக் கூறக்கேட்டால் தங்களிடம் ஐந்து நிமிடத்திற்குமேல் எனக்கு அலுவலில்லையென்று அறிந்து கொள்வீர்கள். தாங்கள் முன்னமே மிக்க துயரத்தில் இருப்பது நான் அறியாததல்ல...." என்றான்.

தேய்வ:—"தாங்கள் என்னை மன்னுப்பு கேட்கவேண்டிய அவசியமே யில்லை. உண்மையாகவே நான் மிக்க வியாகூலத்தில் ஆழ்ந்திருந்தாலும், தங்கள்மேல் எனக்கொரு கோபமுமில்லை. ஏனெனில் தாங்கள் என் கணவரைக் கைதுசெய்தது சட்டத்தின்படி தாங்கள் செய்ய வேண்டிய கடமையாகிய தொழிலே உட்காருங்கள். என்னாலாகவேண்டிய காரியம் ஏதாவது இருந்தால் கூறுங்கள்" என்று மிக்க நிதானமாய்க் கூறினாள். அவள் எண்ணம் "சற்று ஆலசியம் செய்தால் அதற்குள் தானப்பன் வீட்டைவிட்டு வெளிப்பட்டு தப்பித்துக்கொண்டு போய்விட அனுகூலமாயிருக்கும்" என்பதே.

செல்வ:—அம்மா! இரண்டு மூன்று மாதங்கட்கு முன் அருமைநாதம் பிரபு என்னும் செல்வவந்தர் திடீலென்று மாயமாய்க் காணமற் போய்விட்ட சங்கதி தாங்கள் அறிந்திருக்கலாகும். அவருடைய புத்திரன் மதுரைநாயகம் பிரபு தன் தந்தை விஷயமாய் மிக்க வியாகூலத்தோடு மன முடைந்துவிட்டிருக்கிறார். தன்

தந்தையின் விஷயத்தை யெப்படியாவது கண்டுபிடிக்க வேண்டியதென்று அவர் என்னை மிகவும் வேண்டிக் கொண்டார். அதற்காக நான் எவ்வளவோ கஷ்டப் பட்டு இதன் மூலாதாரத்தைக் கண்டுபிடித் திருக் கிறேன். இதுவரையில் அதைப்பற்றி எனக்கு ஒரு உளவு மகப்படவில்லை. இன்று ஒரு சம்பவம் நேர்ந்தது. அச்சந்தர்ப்பத்தில் எனக்கு ஒரு உளவு அகப்பட்டது" என்றான்.

இதைக் கேட்டதே தெய்வயானை பேரிடி விழுந்தவ ளானாள். ஆயினும் தன் திகிலும் கலவரமும் யாவும் அடக் கிக்கொண்டு செல்வநாதனை நோக்கி "அப்படியாயினும் அந்த விஷயத்திற்கும் எனக்கும் என்ன சம்பந்த மிருக்கிறது? எனக்குத் தெரியவில்லையே" என்றாள்.

செல்வ:—"அது நோய் உம்மோடு சம்பந்தப்பட்டில்லை. ஆனால் வெகுவாய் உமது கணவனுக்குச் சம்பந்தப் பட்டதா யிருக்கலாகும்" என்றான்.

இதைக் கேட்ட தெய்வயானை உண்மையாகவே மிக்க இடிவிழுந்து விட்டவளைப்போல் "அய்யோ தெய்வமே! மெய்யாகவா என் கணவர் இக்கொலையைச் செய்திருப்பார்க ளென்று நீர் நினைக்கிறீர்? அய்யோ அவர்மேல் இப்போது விழுந்திருக்கும் இடி போதாதா!" என்றாள்.

செல்வ:—அம்மா! அவர்மேல் அத்தகைய சந்தேகம் ஒன் றும் ஏற்படவில்லை. நடந்த விஷயத்தைக் கூறுகிறேன். சற்று சாவதானமாய்க் கேளும். இப்போது தங்கள் கணவரைச் சிறைசெய்தது பிரதம நியாயாதிபதிக்கு வந்த கை யொப்பமிடாத ஒரு கடிதத்தினாலேயே. அக் கடிதம் என்னிடம் அளிக்கப்பட்டது.

தெய்வ:—கையொப்ப மிடாக் கடிதமா?

செல்வ:—"ஆம். இதோ அக்கடிதம்" என்று அதை யவளிட மளித்தான்.

தெய்வயானை யக்கடிதத்தைக் கண்டதும் தான் எழுதியதே யென்று அறிந்து கொண்டாள். அவளுக்குண்டான பெருந்திகில் சொல்லமுடியாது. மிக்க சாமார்த்தியத்தோடு தன் மனக்குழப்பம் யாவும் அடக்கிக்கொண்டு செல்வநாதனை நோக்கி,

"சரி இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?" என்றாள்.

செல்வ:—அம்மா நான் கூறுவதைச் சற்று பொறுமையாய்க் கேளுங்கள். அதாவது, அருமைநாதம் பிரபுவின் புத்திரன் மாலை என்னிடம் வந்தான். நான் அவனுக்கு நல்வரவு கூறி ஆசன மளித்தேன். அச்சமயம் என் மேஜைமேல் பல கடிதங்கள் கிடந்தன. தன் தந்தையின் விஷயத்தைப் பற்றி நான் எவ்வளவு தூரம் ஜெயமடைந்தேன் என்று அறிய வந்தான். மேஜைமேல் நான் அஜாக்கிரதையாய் வைத்துவிட்டிருந்த கடிதங்களில் இக்கடிதமும் இருந்தது. இதை யவன் பார்த்ததே ஆவலோடு எடுத்து கையெழுத்தைப் பார்த்தான். உற்றுப் பார்த்து, மிக்க வியப்போடு "ஆ! ஆ!! இதே ஆளே. இதே ஆளே!" என்று கூவினன். அதாவது அவன் தன் தந்தையின் பெட்டிகளிலிருந்த கடிதங்களை யெல்லாம் சோதனை செய்தபோது அகப்பட்ட கடிதங்களில் ஒரு கடிதம் அகப்பட்டது. அக்கடிதத்தின் கையெழுத்தும் என் மேஜைமேல் அகப்பட்ட இக்கடிதமும் ஒரே எழுத்தே; அதாவது, இந்தக் கடிதத்தை யெழுதிய ஆளும் அவன் தந்தைக்கு அக்கடி

தத்தை யெழுதிய ஆளும் ஒரே ஆளே என்று தெரிக்தது.

இப்போது இக்கடிதத்தைத் தங்கள் கணவனுக்கு விரோதமாய் எழுதியவள் யாரென்று அவருக்குத் தெரியும்; அதை யறிந்துகொண்டால் அருமைநாதம்பிரபுவின் கொலைக்குக் காரணம் யாரென்பது விளங்கிவிடும்." என்றான்.

இச்சங்கதிகளைக் கேட்டதே தெய்வயானைக்கு மனதில் பெருந்திகிலும் குழப்பமும் உண்டாய்விட்டது. ஏனெனில் இக்கடிதத்தை யெடுத்துக்கொண்டுபோய் நோய் எங்கே நமது கணவனிடம் காட்டிவிடுவானோ, அப்படிக் காட்டினால் கணவன் இது தன் கையெழுத்தே யென்று அறிந்து கொள்வானே என்று பெருந்திகில் அடைந்துவிட்டாள்.

ஆயினும் தன் மனக்கலவரமனைத்தும் அடக்கிக் கொண்டு, செல்வநாதனை நோக்கி,

"ஆம் ஆம்; இது சுபாவமே; ஆயினும் இதைப்பற்றி நீ என்னிடம் வரவேண்டிய அவசிய மின்னதென்று எனக்கு விளங்கவில்லை" என்றாள்.

செல்வ:—மதுரை நாயகம் இக்கடிதத்தால் தன் தந்தையின் முடிவை யெப்படியாவது கண்டறிய லாகுமென்று உணர்ந்து கொண்டான். ஆனால் இப்போதிருக்கும் துக்க சம்பவத்தில் இதைப்பற்றி இச்சமயம் தங்கள் கணவரைக் கேட்பதைவிட தங்களைக் கேட்பதே நலம் என்று கருதி தங்களை விசாரிக்கும்படி வேண்டிக் கொண்டான்.

தெய்வ:—இக்கடிதம் எழுதினது யாரென்று எனக்குத் தெரியவில்லை. நான் எவ்வளவோ சத்தியமாய் நம்பி யிருந்த கணவன் என்னைத் துரோகம் செய்துவிட்

டான் என்று எனக்குத் தெரிந்துவிட்டது. நீர் இக் கடிதத்தை யென்னிடம் விட்டுச் சென்றால் நான் இம் மாது யாரென்று கண்டுபிடிக்க முயல்வதோடு என் கணவனிடமும் தந்திரமாய்ப் பேசி அவள் யாரென் றறிய முயல்வேன். அருமைநாதம் பிரபு எனக்குக் கொஞ்சம் தெரியும்; அவர் புத்திரனும் எனக்குத் தெரி யாதவனல்ல. ஆகையால் அவர்களுக்கு இத்தகைய விஷயத்தில் நான் சகாயம் செய்யக்கூடியதா யிருந்தால் எனக்கு மிக்க சந்தோஷம்" என்றாள்.

அந்தோ மாதரின் மாயத்தில் சிக்கி மோசம்போகாதார் யார்? அதிலும் மாதரை ஆடவரைவிட அதிக மரியாதையாய் நடத்தவேண்டுமென்றும் அதுவே நாகரீகமென்றும் கரு தும் ஜாதியார் அம்மாதரிடம் மயங்கி மோசம்போவது மிக்க சுலபம். மேல்நாட்டு நாகரீகத்திலுள்ள தீங்குகளில் இது வொன்று.

இதனால் மிக்க தந்திரமும், புத்தி சாமர்த்தியமு முடைய நமது துப்பறியும் சிங்கமாகிய செல்வநாதனும் இது விஷயத்தில் மோசம்போய் அவள் நயவஞ்சக வார்த் தைகளை உண்மையென்றே நம்பிக்கொண்டான். அதனால், தனக்கு முக்கிய ஆதாரமான அக்கடிதத்தை யவளிடம் விட்டுவிட்டு "அம்மா! தாங்கள் இவ்வாறு கூறியதைப்பற்றி நான் மிக்க வந்தனமளிக்கிறேன். இக்கடிதத்தைத் தாங் களே வைத்துகொண்டிருங்கள். நான் நாளை மாலை வருகி றேன். இதற்கிடையில் தாங்கள் தங்கள் கொழுனரைக் கண்டு இக்கடிதத்தை யெழுதிய ஆள் யாரென்று அறிந்து கூறுவீர்களென நம்புகிறேன். மதுரை நாயகம் தாங்கள் செய்யும் இந்நன்றியை யுயிருள்ளமட்டும் மறக்கமாட்டான்" என்று கூறி அவள் அவசியம் அப்படியே செய்தாய்க்கூறிய

வாக்குத் தத்தத்தை நம்பிக்கொண்டு விடை பெற்றுக் கொண்டு சென்ருன்.

அவன் இருக்குமட்டும் தெய்வயானை "இவன் எங்கே இக்கடிதம் நாம் எழுதியதென்று சந்தேகம் கொள்வானே, இக்கடிதத்தை எங்கே வாங்கிக்கொண்டு போய்விடுவானே" என்று பெரிய மனக்குழப்பத்தி லிருந்தாள்.

செல்வநாதன் சென்றதே தெய்வயானை அவன்கொடுத்துச் சென்ற கையெழுத்தில்லாத (தானே எழுதிய) கடிதத்தை யுடனே அறையில் எரிந்துகொண்டிருந்த நெகிடித்தீயில் எறிந்து அது வெந்து நீருய்ப்போகுமட்டும் பார்த்துகொண்டிருந்து, "ஆ! நான் அவனுக்குச்செய்த அந்த ஒரே துரோகத்தை ருசுப்படுத்தக்கூடிய ஒரே சாட்சியம் அழிந்தொழிந்தது" என்று கூறிவிட்டு மனத்தைரிய மடைந்தாள்.

அதேநிமிடம் தெய்வயானை தான் தந்திரமாய் வீட்டை விட்டுப் போய்விடும்படி கூறிவிட்டு வந்த தானப்பனை நினைத்துக்கொண்டு எழுந்து அவனை விட்டு வந்த அறைக்குச் சென்ருள்.

அங்குபோய்ப் பார்த்தபோது தானப்பன் காணவில்லை. ஆகையால் தான் கூறியபடி அவன் கட்டிடத்தை விட்டுத் தப்பித்துக்கொண்டு போய்விட்டான் என்று நம்பிக்கொண்டாள். அதனுல் அவன் விஷயத்தை யுடனே மறந்துவிட்டுத் தன் அறைக்குச்சென்று இளவாசனுக்குப் பின் வருமாறு ஒருகடிதம் வரைந்தாள்:—

"மிக்க கௌரவம்பொருந்திய இளவரசர் அவர்கள் சமுகத்திற்கு,

நாளை பதினேரு மணிக்கு எனக்கு தரிசனமளிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். சாதாரண சந்தர்ப்பத்தில் நான்

இத்தகைய வேண்டுகோளை யனுப்புவது ஒழுங்கினமாகவே யிருக்கும். ஆனால் இப்போதிருக்கும் அவசியமும், அபூர்வமும், எதிர்பாராததுமான சந்தர்ப்பத்தை நோக்கினல் இத் தொந்திரவைத் தங்களுக் களிப்பதற்காக நான் மன்னிக்கத் தக்கவளேயென்று எளிதில் புலப்படும்.

இச்சந்தர்ப்பம் மிக்க அபூர்வமானதால் தாங்கள் என்னைச் சந்திக்கும் இச்சம்பவத்தை பரம இரகசியமாய்க் கருதும்படி பிரார்த்திக்கிறேன்.''

தெய்வயானை இக்கடிதத்தை எழுத ஸீல்செய்து ஒரு ஆள்வசம் கொடுத்து இளவரசன் அரண்மனைக்கனுப்பி விட்டு, மணி பத்தாய்விடவே களைப்பினால் தன் அறைக்குச் சென்றாள்.

இதற்கிடையில் அவள் வீட்டைவிட்டுப் போய்விட்டானென்று கருதிய தானப்பன் சங்கதி என்னவாயிற்றென்று பார்ப்போம்.

---

## 61 - வது அத்தியாயம்.

தானப்பன் தான் தனியாய் இருக்க நேர்ந்ததே பல விதக் குழப்பங்கள் அடைந்தான். செல்வநாதன் தனக்காக வாவில்லை, ஏதோ வேறு வேலையாகவே வந்தானென்று தன் மனதைத் தன்னாலானவரையில் தேற்ற முயன்றும் குற்றமுள்ள நெஞ்சானதால் திகிலும் கலக்கமும் நீங்கவில்லை. தான் அங்கிருப்பதை அவன் நிச்சயமா யுணராமல் சந்தேகத்தோடு சோதிக்க வந்திருந்தாலும் வீதியில் தன் ஆட்களைத் தக்க விடங்களில் காவல் வைத்துவிட்டே வந்திருப்பான் ஆதலால் நாம் இப்போது அவசரப்பட்டு

வெளியிற் செல்லலாகாது என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

ஆனல் தெய்வயானே போய்விட்ட பிறகு தான் தனியே அந்தப் போஜன கூடத்தில் பதுங்கிக்கொண் டிருப்பது ஆபத்தாகவே முடியும். ஏனெனில் வேலைக்காரர் யாராவது தற்செயலாய் அங்கு வந்துவிட்டால் பயந்து கூச்சலிட்டு விடுவார்கள். அவனுக்கு இன்னது செய்வதென்று ஒன்றும் தோன்றவில்லே. ஒரு யோசனையுமின்றி போஜன அறையின் கதவைத் திறந்து வெளியிலுள்ள கூடத்தை யெட்டிப் பார்த்தான்.

அங்கு வேலைக்காரர் ஒருவருமில்லே. இதற்குள் அவன் மனதில் ஒரு யோசனை யுதித்தது. அதாவது அச்சமயம் பிரபு வீட்டிலில்லை யென்றும் தெய்வயானே மட்டும் தனியா யிருக்கிருளென்றும் வேலைக்காரர் கூறக் கேள்விப்பட்டிருக்கிருன். அப்படி யிருக்க மறுநாள் இரவு வரையில் அம்மாளிகையிலேயே காலியா யிருக்கும் ஒரு அறையில் ஒளிந்திருந்தாலென்ன? அப்படித்தான் அகப்பட்டுக் கொண்டால் தெய்வயானேதான் அவனேப்பற்றி முடிவு கூறவேண்டும். அவள் துணிந்து அவனுக்குக் கெடுதிசெய்ய முடியாது. ஆகாரம் வேண்டும். அப்படி யவசியமானல், வெளியே சென்று செல்வநாதன் ஆட்களிடம் சிக்கிக்கொள்வதை விட பட்டினியா யிருப்பது நலமே என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

அதன்படி உற்சாக மடைந்து கதவைத் திறந்து கொண்டு அடுத்த அறைக்குச் சென்ருன். அது இரோஜா அறை! அங்குதான் மரகதம்மாள் சற்று கோத்திற்குமுன் பிரபுவோடு சிற்றுண்டி அருந்திவிட்டுச் சென்ருள். ஆகையால் அங்கு பலவிதக் குடிவகைகளும் ஆகார வகைகளும் ஏராள

மாய் வைக்கப்பட்டிருந்தன. தானப்பன் மிக்க சந்தோஷத்தோடு பிரியப்படி குடித்து ஆகாரம்பொசித்து சில சாராயப் புட்டிகளேயும் ஜேபிகளில் நிறைய சிற்றுண்டிகளேயும் எடுத்துக்கொண்டான். அந்த அறையில் இன்னும் தீபங்களும் நெகிடித் தீயும் எரிந்துகொண் டிருக்கின்றன. அதனுல் அவைகளே யணைக்க வேலைக்காரர் எப்படியும் அங்கு வருவார்களென்று தெரிவதால் "நாம் இங்கிருக்கலாகாது; இரவு தங்க மறைவான விடம் தேடிக்கொள்ள வேண்டும்" என்று தானப்பன் தீர்மானித்துக் கொண்டான்.

உடனே அங்கிருந்து அடுத்த அறையின் கதவைத் திறக்க முயன்றுன். அது பூட்டியிருந்தது; ஆயினும் தானப்பன் அதற்கு அஞ்சவில்லை. ஏனெனில் அவனிடம் கள்ளச் சாவி யிருந்ததால் அதனுல் கஷ்டமின்றி யக்கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றுன். அங்கே ஆகாரம் முதலிய ஒன்றுமில்லை.

அந்த அறை சிறு அறையாயிருந்தாலும் மற்ற அறைகளைவிட மிக்க நாகரீகமாகவும் அழகாகவும் அலங்கரிக்கப் பட்டிருந்தது. அங்கிருந்ததீபங்களில் ஒன்றுமட்டுமே எரிந்துகொண்டிருந்தது. அங்கிருந்தீபங்களில் ஒருவெள்ளி விளக்கு இருந்தது. தானப்பன் அதை நன்றுயுற்றுப் பார்த்ததும், "ஆ! இந்த விளக்கிற்குக் கிழநரி நல்ல பணம்கொடுப்பான். நாம் இங்கிருந்து வெறுங்கையோடு செல்லவேண்டியதில்லை" என்று தனக்குள் சிந்தித்துக்கொண்டு இந்த வெள்ளி விளக்கு நம்முடையதேயென்று நிச்சயித்துக்கொண்டான்.

முதலில் அவன் அங்கிருந்த சிற்றின்பமூட்டும் சிலைகளேயும் படங்களேயும் கவனிக்கவில்லை. பிறகு அவற்றை யொவ்வொன்றுய்க் கவனிக்கத்தொடங்கி பின் கண்டபடி சிந்தித்தான்:—

"அடடா! இந்தப் பிரபு வமிசத்தவர்கள் எல்லாம் மிகக் கில்லாடி ஆசாமிகளே. சிற்றின்பத்தில் கண்மண் தெரியா மல் ஆழ்ந்து கிடப்பவர்கள். அடடா எப்படிப்பட்ட கற்பு டைய கன்னிகைகளாயினும் இப்படிப்பட்ட படங்களைக் கண்டால் நெறிதவறிவிடத் தடையேயில்லை. ஆ! இத்தெய்வ யானைகூட இவைகளைப் பார்த்தே யிருப்பாள். ஓகோ! தெரி கிறது. தெரிகிறது. அன்று இவள் கணவன் இளவரசனை யப்படித் தந்திரமாய் இவர்கள் வீட்டிற்குக் கொண்டு போனது இவள் இளவரசனைத் தன் மாயவலையிற் சிக்க வைப்பதற்காகவே யிருக்கும். அவன் நம்மிடம் உண்மையை மறைத்துக் கூறினன். இவள் சாதாரணமாய் நமது கூட்டத் திலுள்ள மாதர்களைவிடச் சற்றும் உயர்ந்த யோக்கியதை யுடையவளா யிருக்கமாட்டாள்" என்று தனக்குள் தீர்மா னித்துக்கொண்டு, அதைவிட்டு அடுத்த அறைக்குச் சென் றுன்.

அந்த அறையில்தான் எந்திரங்கள் வைக்கப்பட்ட நாற் காலிகள் இருப்பது. தானப்பன் தான் முன் அறையிலிருந்த தீபத்தைக் கையிலெடுத்துவந்தான். அந்த அறையில் தீபமே யில்லை. ஆகையால் இரவு அங்கு வேலைக்காரர் ஒருவரும் வர வேண்டிய அவசியமில்லையென்று தெரிந்தது. அங்கிருந்த நாற்காலிகளோ விசாலமானவை. மிருதுவான மெத்தைகள் தைக்கப்பட்டவை. ஆகையால் இரவு சௌக்கியமாய் நித்தி ரை செய்ய இதுவே நல்ல இடம் என்று தானப்பன் தீர்மா னித்துக்கொண்டு உடனே மிக்க சந்தோஷத்தோடு ஒரு நாற்காலியில் பொத்தென்று உட்கார்ந்தான்.

ஆனல் அவன் அவ்வாறு உட்கார்ந்து சாய்ந்ததே டக் டக் என்று உலோகங்கள் அடிபடும் சத்தம் கேட்ட தும், தானப்பன் கணுக்கைகளும் துடைகளும், தோள் களும் இரும்பு வளையங்களால் நாற்காலியின் கைகளிலும்

சட்டங்களிலும் பிணிக்கப்பட்டன. முதலில் நடந்த சங்கதி யின்னதென்று தெரியாதபடியால் தானப்பன் முதல் முதலில் வேடாது வலையிற் சிக்கிய சிங்கத்தைப்போல் திப்பிரமை யடைந்துவிட்டான். பிறகு தன்னு லானமட்டும் முயற்சி செய்து பார்த்தும் அந்த நாற்காலியிலிருந்து விடுவித்துக்கொள்ள முடியவில்லை.

பிறகு நிதானித்துப் பார்த்தபின் நாற்காலியில் மறைவான எந்திரம் வைக்கப்பட் டிருக்கிறதென்றும், நாற்காலியே பூமியில் நிலையாய் பியப்ப ட் டிருக்கிறதென்றும் தெரிந்துகொண்டான். என்ன செய்வது? பெருங் கலவரமடைந்து வாயில் வந்தபடி சபித்தான். அவன் மனதில் பெருங் குழப்பம் உண்டாகி திகில் நிறைந்து தேகமுழுதும் குபீலென்று ஆராய்ப் பெருகி நாற்காலியில் சாய்ந்துவிட்டான்.

——

## 62-வது அத்தியாயம்

மேற்கண்ட சம்பவங்கள் நடந்த மறுநாள் முற்பகல் சுமார் 11-மணியிருக்கும். அச்சமயம் தெய்வயானை இரோஜா அறையில் தனியே உட்கார்ந்திருக்கிறாள். நல்ல அழகிய உடை யணிந்துகொண்டு ஆடவர் மனதைக் கவரக் கூடிய வண்ணமாய் ஒரு சோபாவில் அமர்ந்து யாருக்காகவோ யெதிர் பார்த்துக்கொண் டிருப்பவள்போல் அடிக்கடி செவிகளால் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தாள். மணி பதினொன்றடித்தது. அச்சமயம் வீதியில் ஒரு வண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்டது. சற்று நேரத்திற்குள் ஒரு வேலைக்காரன் வந்து இளவரசன் வருகிறார் என்று கூறி

விட்டுத் திரும்பினன். அவன் சென்றதே தெய்வயானை ஏதோ மிக்க ஆழ்ந்த சிந்தனையில் விசனத்தோ டிருப்பவள் போல் முக வாட்டத்தோடு இளவரசனை யெதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

தெய்வயானை யெழுதி யனுப்பிய கடிதத்தில் கோரிய வேண்டுகோளின்படித்தான் இளவரசன் அங்கு வந்தான். தெய்வயானை சுகசிங்கம் பிரபுவின் சகோதரன் புத்திரி யென்றும் மிக்க அழகுடையவளென்றும் கேள்விப்பட் டிருக்கிறனே யன்றி அவளை எப்போதும் கண்டதில்லை யென்பதே அவன் அபிப்பிராயம். ஏனெனில் தெய்வயானை யென்ற மாதை யவன் பார்த்ததில்லை. தான் கண்ட அதிசய மாதே யிவளென்று அறியான். அவள் அழகைப்பற்றி கேள்விப்பட்டிருப்பதால் அவளைப் பார்க்கவும் பேசவும் சமயம் சேர்ந்ததைப்பற்றி இளவரசனுக்கு மிக்க சந்தோஷமே. சுகசிங்கம் பிரபு மாகதவல்லியிடம் இருந்து சமாச்சாரம் வந்து அதற்காக பாஞ்சால நாட்டிற்குச் சென்றிருக்கிறன் என்று அவனுக்குத் தெரியும். அதனல் பிரபு ஏதோ விசேஷ சமாசாரம் நமக்குக் கூறும்படி சொல்லி யிருக்கிறர் என்று எண்ணி யிருந்தான்.

இளவரசன் அறைக்குள் வரும்போது தெய்வயானை அவன் பக்கம் முதுகைத் திருப்பிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவள் எதிரில் ஒரு வீணை யிருந்தது. இளவரசன் வாசற்படிக்குள் அடியெடுத்து வைத்து தன் முன் உட்கார்ந்திருக்கும் உருவத்தைக் கண்டதே அப்படியே நின்று உற்று நோக்கினன். அவன் அவளது சிரசின் வடிவத்தையும் வலம்புரிச் சங்கையும் வெட்கச் செய்யும் கழுத்தின் தோட்களின் வனப்பையும் முதுகின் அமைப்பையும் உடுக்கை போன்ற சிற்றிடையையும் கண்டு இத்தகைய பின்னழகையுடைய

இம்மாதின் முன்னழகு எவ்வளவு ஆனந்தத்தை யளிக்கத் தக்கதா யிருக்கும் என்று தனக்குள்ளாகவே சிந்தித்தான். அவள் உட்கார்ந்திருந்த மாதிரியால் ஏதோ மனச்சோர் வுடையவள்போல் தோன்றவே "ஆ! அழகே ஒருருவமாய் அமைந்து வந்த இம்மாதாசிக்கு வியாகூலம்; ஏன் உண்டா யிற்றோ? ஒரு சமயம் அந்த வியாகூலமே இவள் நம்மை வரும்படி கோரியதன் காரணமா யிருக்குமோ? அப்படி யிருந்தால் நாம் பாக்கியசாலியே" என்று சந்தோடத்தோடு எண்ணிக்கொண்டே முன் செல்ல ஒரு அடி யெடுத்து வைத்தான். அப்போதும் அறைக்குள் யாரோ வந்திருக் கிறார்களென்ற உணர்ச்சியே சற்று மில்லாதவள்போலவே அபிநயம் செய்துக்கொண்டிருக்கும் தெய்வயானை, தன் முகத்தைத் திருப்பாமலே வீணையை யெடுத்து மீட்டத் தொடங்கினாள்.

அவள் வீணை வாசிப்பதில் மிக்க தேர்ச்சியடைந்தவ ளானதாலும், இளவரசனை மயக்கவேண்டுமென்ற கருத்து கொண்டவளானதாலும் நல்ல இனிப்பாகிய நாதங்களை யுண்டாக்கினாள். இளவரசன் அந்த அறையின் அலங்காரத் தைக் கண்டதோடு அவள் வனப்பையும் கண்டு மயங்கி விட்டபடியால் ஏதோ தேவபோகத்தி லிருப்பதாய் எண்ணி மயங்கிவிட்டான்.

தெய்வயானை வீணையின் சுரத்தை யதிகமாக்கிக் கொண்டு அறையில் ஒருவர் இருப்பதை யறியாதவள் போலவே கொஞ்சம் கொஞ்சமாய்த் தன்முகத்தை இளவர சன் பக்கமாய்த் திருப்பினாள். இளவரசன் அவள் வனப் பைக்கண்டு மிக்க வியப்படைந்ததோடு, அவள் முகத்தைக் காணக்காண தான் முன்னம்கண்ட முகம்போலிருப்பதா யறிந்துகொண்டான். கடைசியில் தன்னை மயக்கி ஒரு பத்தி

ரத்தில் கையொப்பம் வாங்கிக்கொண்ட அதே அதிசய மாதென்று தெரிந்து கொண்டான்.

தெய்வயானை கடைசியில் தன் முகத்தைப் பூரணமாய் இளவரசன் பக்கம் திருப்பியதே, இளவரசன் தன் காதலை யடக்க முடியாதவனுய்ச் சட்டென்றுபோய் அவள் பாதங் களில் முழங்காலிட்டுப் பணிந்து,

"ஆ! என் கண்மணியே, என் அதிசயமான அபூர்வ மான ஆசை நாயகியே, இன்னும் மர்மமில்லை யென்று தெரிந்துகொண்டேன்" என்ருன்.

தெய்வ:—"அப்படியானுல் என்மேல் தங்களுக்குக் கோப மில்லை யென்று சந்தோஷ மடைகிறேன்" என்ருள்.

இளவர:—கோபமா? உன்மேல்கூட எனக்குக் கோபம் வருமோ? ஒருகாலு மில்லை. உண்மையில் அந்தத் தேவாரயனுடைய மனைவிதானு? என் நண்பராகிய சுக சிங்கம் பிரபுவின் சகோதரர் புத்திரியாகிய தெய்வ யானைதானு? அப்படியாயின் இப்பெரிய மர்ம விஷயம் என்ன? அதாவது அன்று நீதிக்கு விரோதமாய் என்னை உன் வீட்டிற்குக் கொண்டுவந்ததும், பத்திரத்தில் கையொப்பம் வாங்கியதும் இதெல்லாம் நடந்த காரண மென்ன?

தெய்வயானை அவனை யன்போடு ஆலிங்கனம் செய்து கொண்டு, "எல்லா விஷயங்களையும் ஒளிக்காமற் கூறு கிறேன். ஆனுல் எனக்கு வாக்குத்தத்தம்...." என்றதே,

இளவர:—"ஒரு வாக்குத் தத்தமா? நீ என்ன கேட்டாலும் அப்படியே வாக்குத்தத்தம் செய்வேன். நான் உன்னை மறுபடி சந்திக்க நேர்ந்ததே பெரும் புண்ணியமாகக் கருதுகிறேன். நீ கூறுவதைக் கூறு. பிறகு நாம் காதலைப் பற்றியே பேசுவோம்.

தெய்வ:—நான் கூறுவதைத் தாங்கள் தயவுசெய்து பொறுமையாய்க் கேட்கக் கோருகிறேன்.

இளவரசன் சந்தோஷத்தோடு அவளை யாலிங்கனம் செய்துகொண்டு "நீ கூறவேண்டியவற்றைக் கூறு" என்ருன்.

தெய்வ:—சுருக்கமாய்க் கூறுகிறேன். முதலாவது நான் சுகசிங்கம் பிரபுவின் சகோதரர் புத்திரியே. அப் பாமதுஷ்டனுகிய தேவராயனை மணம் செய்துகொள்ளுமட்டும் இங்குதான் இருந்தேன். அத்துரதிஷ்டமான கலியாணமான பின் நான் பட்ட கஷ்டங்கள் கடவுளுக்கே அற்புதம்.

இளவர:—அப்படியானுல் உன் கணவன்மேல் உனக்குப் பிரியமில்லைபோல் தெரிகிறது.

தெய்வ:—நான் அவனை எமனைப்போல் வெறுக்கிறேன். ஆ! அவன் செய்த கொடுமைகளை நினைத்தால், கடவுளே! அவன்மேல் எவள்தான் காதல் கொள்வாள்? எனக்குத் தங்கள்மேல்தான் பூரணக் காதல் இருக்கிறது.

இதைக் கேட்டதே இளவரசன் மிக்க ஆனந்த மடைந்தான். "சரி மிக்க சந்தோஷம் அப்புறம் நீ கூறுகிற சங்கதியைக் கூறு" என்ருன்.

தெய்வ:—தேவராயன் சந்திரனைக் கொன்றுவிட்டானல்லவா?

இளவர:—ஆம். அன்றிரவு நீ யென்னிடம் கையொப்பம் வாங்கிய பத்திரத்தில் என்ன சங்கதி யடங்கி யிருக்கிறது?

தெய்வயானை உடனே யெழுந்துபோய்த் தன் பெட்டியைத் திறந்து பத்திரத்தை யெடுத்து வந்து "இதோ அப் பத்திரம் பாருங்கள்" என்று இளவரசனிட மளித்தாள்.

இளவரசன் அதை வாங்கி வாசித்துப்பார்த்ததும் மிக்க வெறுப்பும் கோபமு மடைந்து "ஆ! இத்தகைய பத்திரத்திற்கு நீ உடந்தையா யிருந்தாயா. நீ இப்போது என் மேல் காதலுடையவள்போல் பேசியதைப் பார்த்தால்...." என்பதற்குள்,

தெய்வயானை அவன்மேற் காதல் பார்வையை யதிகமாய் வீசி "தாங்கள் அவசரப்பட்டு என்மேல் தவறான அபிப்பிராயங் கொள்ளவேண்டாமென்று வேண்டிக் கொள்கிறேன்" என்றாள்.

இளவரசன் "இப்பத்திரத்தை யுடனே யழித்துவிட்டால் என் மனதிற்கு...." என்பதற்குள்,

தெய்வ:—இதை யிப்போதே யழித்துவிட்டால் எனக்குச் சந்தோஷமே. ஆனல் அப்படிச் செய்யும் பட்சத்தில் என் மானம் போய்விடுவதோடு தாங்கள் அன்றிரவு அங்கு வந்த சங்கதி முதலிய யாவும் வெளிவந்து விடும்.

இளவர:—அப்படியானல் இத்தகைய அக்கிரமமான உடன் படிக்கைக்கு நான் இணங்கி நடக்கவேண்டு மென்கிருயோ? சற்று முன் அவனை வெறுப்பதாய்க் கூறினாயே.

தெய்வ:—"ஆம். இப்போதும் அவனைப் பூரணமாய் வெறுப்பதாகவே கூறுகிறேன். அவனை யிப்போது அவனுக்கேற்பட்டிருக்கும் வினைப்படி விட்டுவிட வேண்டுமென்பதற்காகவே இப்பத்திரத்தை யழிக்கவேண்டாமென்று நான் கூறுவது. கடைசி வரையில் அவனுக்கு நம்பகத்தை யுண்டாக்கிக்கொண்டே யிருக்கவேண்டும். அதற்குத் தாங்கள் உதவிசெய்ய வேண்டும். அப்

பத்திரத்தில் நான் கோருகிறபடி எழுதிவிட வேண்டும்" என்றாள்.

இளவர:—"அப்படிக் கடைசி வரையில் நடந்துகொள்ள உனக்குத் தைரியமுண்டா? அப்படியாயின் பத்திரத்தில் என்ன எழுதச் சொல்கிறாய். நீ இதை யெப்படி நிறைவேற்றுவாய்?" என்றான்.

தெய்வயானை இளவரசனை மிக்க அன்போடு ஆலிங்கனம் செய்துகொண்டு அவன் செவியில் குசுகுசுவென்று சுமார் கால்மணி நேரம் ஏதோ கூறினாள்.

இளவரசன் மிக்க மகிழ்ச்சி யடைந்து அவள் கூறிய படி "இப்பத்திரத்தை நான் மறுபடி பார்வை யிட்டதில் இது தகுதியான தல்லவென்று தெரிந்ததால் நான் என் கையொப்பத்தை இரத்து செய்விட்டேன்" என்று அப்பத்திரத்தில் எழுதிவிட்டான்.

தெய்வயானை அப்பத்திரத்தைப் பத்திரமாய்ப் பெட்டியில் வைத்துப் பூட்டிக்கொண்ட பின் இருவரும் சந்தோஷமாய்க் காதலைப்பற்றி பேசத் தொடங்கினார்கள். அச்சமயம் இளவரசன் தற்செயலாய் எதிரிலிருக்கும் இரகசிய அறைக்குச் செல்லும் வாசற்படியைக் கண்டான். உடனே தெய்வயானையை நோக்கி "இதோ இந்த அறைக்குள் சென்று பார்த்திருக்கிறாயா?" என்றான்.

தெய்வயானை "அது என் பெரிய தந்தையின் இரகசிய அறை. அதற்குள் யாரும் செல்லக்கூடாது. அங்கு என்ன இருக்கிறதோ பார்க்கவேண்டுமென்று எனக்கு ஆவலே" என்றாள்.

இளவர:—"அப்படியாயின் இப்போது நான் உன்னை யந்த அறைக்கு அழைத்துக் கொண்டுபோய் அங்கிருக்கிற அதிசயங்களைக் காட்டுகிறேன்" என்றான்.

தெய்வ:—அந்தோ! நாம் இப்போது அதற்குள் செல்லமுடியாது. ஏனெனில் அதன் சாவி என் பெரிய தந்தையிடமே யிருக்கிறது.

இளவர:—ஓ! இதற்கு இரகசிய வழி யிருக்கிறதே உனக்குத் தெரியாதோ?

தெய்வ:—தெரியாதே.

இளவர:—"சரி வா. நான் உன்னை அந்த இரகசிய அறைக்குள் அழைத்துச் செல்கிறேன்" என்றான்.

உடனே யிருவரும் எழுந்து சென்றார்கள். இளவரசன் ஒரு சுவரிலிருந்த இரகசிய மரையைத் திருப்பியதே அங்கிருந்த கள்ளக் கதவு திறந்துகொண்டது. இருவரும் அவ்வழியாய்ச் சென்று, சிற்றின்பத்தை மூட்டும் சிலைகளும் படங்களும், எந்திரம் வைத்த நாற்காலிகளும் இருக்கும் அறைக்குள் சென்றார்கள்.

---

## 63-வது அத்தியாயம்.

அறைக்குள் இவர்கள் சென்றதே தெய்வயானை அங்கு நாற்காலியில் இருக்கும் தானப்பனைக் கண்டதும் பயந்து அலறிக் கூச்சலிட்டுக்கொண்டே திரும்பி ஓடிவந்தாள். பின்னால் வந்த இளவரசன் அவளைப் பிடித்துக்கொண்டிராவிட்டால் அவள் கீழேவிழுந்துவிட்டிருப்பாள். இளவரசன் தானப்பன் சொரூபத்தைக் கண்டதே கலகலவென்று நகைக்கத் தொடங்கினான். "அடடா இந்த அபுரூபமான புருடன் யார்?" என்றான்.

தெய்வநாயகி தான் அந்த அறையை இதுகாறும் கண்டதில்லை யென்று இளவரசனிடம் கூறினாலும் உண்மை

யில் அவளுக்கு எல்லாச் சங்கதியும் தெரியும். ஆகையால் சற்று நிதானித்துப் பார்த்ததும் தானப்பன் நிலைமையை யறிந்துகொண்டாள். "ஓகோ! இவன் நம்மிடம் கூறியபடி யுடனே வீட்டைவிட்டுப் போய்விடாமல் என்ன காரணத் தாலே இங்கெல்லாம் நுழைந்து பார்த்திருக்கிறான். உளவறி யாமல் இந்த நாற்காலியில் உட்கார்ந்து விலங்கில் சிக்கிக் கொண்டான்'' என்று அறிந்துகொண்டாள்.

இளவரசன் இச் சம்பவத்தைக் கேலியாய் நடத்து கிறான் என்பதை யுணர்ந்த தானப்பன், இளவரசனை நோக்கி ''பரிதாபமான இவ்வனுதியை இக்கஷ்டத்திலிருந்து தாங் கள் மீட்டுவிடலாகாதா? கடந்த இரவு பத்துமணி முதல் நான் இந்த இக்கட்டில் சிக்கிக்கொண்டிருக்கிறேன்'' என் றான்.

இளவர:—அடடா! இவன் என்னைச் சிரிக்கச்செய்வதா லேயே கொன்று விடுவான். என் காதலியே! இவன் யார்? உனக்குத் தெரியுமா?

தெய்வ:—"இவனை நான் இதுவரையில் கண்டதேயில்லை'' என்று கூறிக்கொண்டே தானப்பனைக் குறிப்பாய் நோக்கி "இவன் இங்குள்ள வேலைக்காரிகளில் யாரிட மாவது சினேகம் கொண்டு அதற்காக வந்து இந்த நாற்காலியில் சிக்கிக்கொண் டிருப்பானென்று நினைக் கிறேன்'' என்றாள்.

தானப்பன் அவள் குறிப்பாய்க் கூறிய கருத்தை யறி ந்துகொண்டு, "அம்மா தாங்கள் உத்தேசித்தது முழுமை யும் உண்மையே. ஆனால் அப்பெண் என்னை ஏமாற்றி இத் தகைய இக்கட்டில் கொண்டு வந்து மாட்டிவிட்டாள். ஆயி னும் நான் அவளைப் பார்த்துக்கொள்வேன். தாங்கள் தயை

புரிந்து இச்சங்கதியை வெளியிடாதிருக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்'' என்றான்.

தெய்வ:—"நான் அப்படி வெளியிடமாட்டேன். நீயும் இங்கு கண்ட சம்பவங்களை எங்கும் வெளியிடக் கூடாது'' என்றாள்.

தானப்:—கேட்போர் என்னைக்கண்டு நகைக்கும்படி நான் வைத்துக்கொள்ள மாட்டேன். தயவுசெய்து என்னை விடுதலை செய்யலாகாதா?

இளவர:—"ஆகா! அப்படியே செய்பலாம். கொஞ்சம் பொறு. உண்மையாகவே இங்குள்ள வேலைக்காரிக ளில் உன்போன்ற ரூபவான்மேல் காதல்கொள்கிற வள்கூட ஒருத்தி யிருக்கிறது உண்மைதானா?'' என்றான்.

தானப்:—எப்படியோ அவள் என்மேல் காதல்கொண் டிருப்பதாகவே அபிநயம் செய்தாள். ஆயினும் என்னை இத்தகைய ஆபத்தில் சிக்க வைத்துவிட்டு வேடிக்கை பார்ப்பதற்கே இப்படிச் செய்தாளென்று இப்போது தெரிகிறது.

தெய்வயானை இளவரசன் தோளைப் பற்றிக்கொண்டு, "இவனை விடுதலைசெய்து வெளியேற்றிவிடுவோம்'' என்றாள்.

இளவரசன் முதலில் "ஆம். இவனை யொழித்துவிட் டால்தான் நாம் நிம்மதியா யிருக்கமுடியும்'' என்று கூறி விட்டு, மறுபடி யுடனே, "இல்லை யில்லை, இப்படிப்பட்ட துஷ்டன் தேவராயன் விஷயமாய் நாம் கொண்டிருக்கும் எண்ணத்திற்கு அனுகூலமா யிருப்பான்'' என்றான்.

தெய்வ:—"தங்கள் கருத்தை யறிந்து கொண்டேன். ஆனால் தாங்கள் இவனை நம்புகிறீர்களா?'' என்று ரகசியமாய்க் கேட்டாள்.

இளவர:—"ஏன் நம்பாமல். அவன் நமக்கு விரோதமாய் வெளியில் ஏதாவது கூறினல் தன் வார்த்தையை ஒருவரும் நம்பமாட்டார்களென்றும் தனக்கே கெடுதிவருமென்றும் அறிவான். அதோடு பணம் எல்லாம் செய்யும்" என்றான்.

தேய்வ:—இவன் இப்போது துரைத்தனக் கொலையாளியாயில்லை. போலீஸாருக்கு ஒளிந்துகொண் டிருக்கிறான். இவனே மரகதவல்லி யம்மாள் வீட்டு வேலைக்காரனை அங்கு களவு நடந்த தினம் துப்பாக்கியாற் சுட்டுக் கொன்றவன்.

இளவர:—"ஆமாம். அதை நான் மறந்துவிட்டேன். ஆயினும் இந்தப் பயல்கள் தப்பித்துக்கொள்ள ஏதாவது ஒரு கள்ளவழி வைத்துக்கொண் டிருப்பார்கள். எதற்கும் இவனை விசாரித்துப் பார்ப்போம்" என்று கூறிவிட்டுத் தானப்பனை நோக்கி,

"நீ யிந்த இக்கட்டிலிருந்து தப்பித்துக்கொள்ள ஏதாவது வழி யிருக்கிறதா?" என்றான்.

தானப்பன் "முதலாவது தாங்கள் என்ன கருத்தோடு இதைக் கேட்கிறீர்கள்?" என்றான்.

இளவர:—கெட்ட எண்ணத்தோடு நான் கேட்கவில்லை. நான் உனக்குக் கெடுதி செய்வது என் காரியத்திற்கு அனுகூல மல்லவென்று நீ யறிவாய். உனக்கு நாங்கள் ஒரு கெடுதியும் செய்யமாட்டோம்; அதற்கு மாறாய் நன்மை வேண்டுமாயின் செய்வோம்.

தானப்:—"மகாராஜா உண்மையைக் கூறுகிறேன்" என்று தன் நிலைமையைக் கூறினன்.

"முடிவில் நான் உண்மையைக் கூறுகிறேன். இந்தம் மாளுடைய கணவராகிய தேவாராயர் எப்படியாயினும் தூக் குத் தண்டனை யடைவார். ஆனால் அச்சமயம் அந்த வேலைக்கு ஆள் அகப்படா விட்டால் நான் வருகிறேன். 'நான் என்னகுற்றம் செய்திருந்த போதிலும் என்னைப் பூரணமாய் மன்னிக்க வேண்டும்' என்றால் அப்படியே செய்வார்கள். அந்த ஒரு நம்பகம் தான் எனக் கிருக்கிறது" என்றான்.

இளவரசன் தன் கா தலியை நோக்கி "நான் இவனிடம் கொஞ்சம் பேசிவிட்டுவருகிறேன்" என்று கூறிவிட்டு தானப் பனிடம் சென்று சற்றுநேரம் பேசிவிட்டுத் தெய்வயானை யிடம் சென்று "அவன் என் ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொண் டான். எனக்கு இந்த யோசனை வந்தது நல்ல வேளையே" என்றான்.

தேய்வ:—"சரி. அவனை விடுதலை செய்துவிட்டீர்களா? அவன் வீட்டைவிட் டொழிந்தானா?" என்றாள்.

இளவர:—அவன் பகலில் இங்கிருந்து வெளிதாண்ட முடி யாது. ஆகையால் தீபம் வைக்கிற வரையில் அவன் இங்கிருக்க வேண்டியதுதான். அவனை யந்த விலங்கி லிருந்து விடுவித்து விட்டேன். அவன் நன்றாய்த் தின்று மடியில் நிறையத் தின்பண்டங்களை யெடுத்து நிரப்பிக் கொண்டான்.

தேய்வ:—"நாம் இதைவிட்டுப் போய்விடுவோம். இக்கள் ளன் எப்படி இங்கு வந்து சேர்ந்தானோ எனக்குத் தெரியவில்லை" என்றாள்.

அப்போதுதான் அவள் மனதில் ஒரு யோசனை யுண் டாயிற்று.

ளவர்:—அவனிடம் இருந்த கள்ளச் சாவியால் இந்த அறையின் கதவைத் திறந்தானும். சரி, நாம் செல்வோம் வா!" என்றான்.

போஜன அறைக்குள் சென்றபின் இருவரும் மிக்க சந்தோஷத்தோடு சற்றுநேரம் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். இளவரசன் "நாம் கூடிய சீக்கிரம் சந்திப்போம்" என்று கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டு சென்றான். அவன் சென்றதே தெய்வயானையும் தன் வண்டியைக் கொண்டுவரும்படி கட்டளை யிட்டுவிட்டு வெளியிற் செல்ல ஆயத்தமானாள்.

* * * * *

* * * *

மேற்கண்ட தினம் மாலை சுமார் மூன்று மணிக்கு, சற்றேறக்குறைய பதினேழு வயதுடைய ஒரு அழகிய கன்னிகை நகரத்திலுள்ள பெரிய சிறைச்சாலையை நோக்கிச் சென்றாள். அவள் முகம் துக்கத்தால் வெளுத்து மிக்க வாட்ட மடைந்திருந்தது. அதோடு அவள் முகத்தில் அவள் களங்கமற்ற உள்ள முடையவளென்றும், குற்றமற்றவளென்றும், நிரபராதி யென்றும் விளங்கியது. அவள் அச்சமும் நாணமு முடையவளென்று நன்கு விளங்கியது.

அக்கன்னிகை சிறைச்சாலையின் வாயிற்படி யண்டை சென்றதும் அங்கிருந்த காவலன் "யாரம்மா? யாரைப் பார்க்க இங்கு வந்தீர்கள்?" என்றான்.

அக்கன்னிகை மிக்க வியாகூலத்தோடும் நாணத்தோடும் "விஸ்வநாதன் என்ற ஒரு வாலிபர் இன்று பிற்பகல் இங்கு கொண்டுவரப்பட் டிருக்கிறரென்று கேள்விப்பட்டேன்" என்றாள்.

காவலன் "அம்மா! அப்படிப்பட்ட ஆள் ஒருவரும் இங்கு கொண்டுவரப்படவில்லை. ஆனல் காலையில்

ஒரு இளைஞன் நகர அதிகாரியால் குற்றம் சாட்டப்பட்டு இங்கு கொண்டுவரப்பட் டிருக்கிறான்'' என்றான்.

அக்கன்னிகை "அந்த ஆளைத் தயவுசெய்து எனக்குக் காட்டுகிறீர்களா? அய்யோ! அவன் என் சகோதரன்'' என்று கண்ணீர்விட் டழுதாள்.

காவலன்:—"அம்மா! தாங்கள் சிறையி லிருப்பவர்களைக் காணும் வேளை போய்விட்டது. நாளை காலை பத்து மணிக்கு வந்தால்தான் காணக்கூடும். நான் கட்டளைக்கு மீறி நடக்கமுடியாது. மிக்க விசனப்படுகிறேன். இந்தப் படிக்கட்டின் மேலேறி மேல் மாடிக்குச் சென்றால் அங்கே சிறைச்சாலையின் பிரதம அதிகாரியாகிய கவர்னர் இருக்கிறார். அவரைக் கண்டால் ஒரு சமயம் அவர் உனக்கு உதவிசெய்யக் கூடும்'' என்றான்.

அமிர்தம்மாள் என்ற அக்கன்னிகை காவலன் காட்டிய வழியே சென்று சிறைச்சாலை கவர்னரிருக்கும் ஸ்தலத்தின் கதவைத் தட்டினாள்.

ஒரு வேலைக்காரி வந்து கதவைத் திறந்து கவர்னரிடம் கொண்டுபோய் விட்டாள். அவர், அக்கன்னிகையின் சங்கதியைக் கேட்டு "ஆ! ஆம் ஆம். பொய்க் கணக்கெழுதி மோசம் செய்ததாய் என் நண்பரான வேலப்பரால் குற்றம் சாட்டப்பட்ட விஸ்வநாதன் என்ற ஒரு வாலிபன் இங்கு கொண்டுவரப்பட் டிருக்கிறான். ஆனால் இப்போது அவனைக் காணமுடியாது; நாளை காலைதான் காணலாம். சட்டத்திற்கு விரோதமான விஷயத்தை நான் செய்யலாகாது. ஆகையால் நான் உனக்கு இப்போது உதவிசெய்ய முடியாது'' என்று கூறிவிட்டுக் கதவை மூடிவிட்டு உள்ளே சென்றார்.

அமிர்தம்மாள்:—மிக்க துயரத்தோடு கண்ணீர் விட்டுக் கொண்டே அங்கிருந்து திரும்பினுள்.

அப்பரிதாபமான நிரபராதியாகிய ஏழைக் கன்னிகை சென்ற அரைமணி நேரம் கழித்து, ஒரு நாணயமான குதிரை வண்டி வந்து கவர்னர் வீட்டெதிரில் நின்றதும், நாணயமான உடை யணிந்த ஒரு குதிரைக்காரன் தடதட வென்று கதவைத் தட்டினுன். கதவு உடனே திறக்கப் பட்டதும் கவர்னரே நேரில் வந்து வண்டியிலிருந்து இறங் கிய தெய்வயானையை மிக்க மரியாதையோடு வரவேற்றுத் தன் அறைக்கு அழைத்துக்கொண்டு சென்றுன்.

தெய்வ:—"பரிதாபமான என் கணவனை நான் காணவேண் டும்" என்றுள்.

கவர்னர்:—"அம்மா இப்போது அகாலமானதால் நான் இதற்கு இடந்தாலாகாது. ஆனுல் தங்கள் வரையில் அக்கட்டளையை யப்படிச்செலுத்த முடியாது. அவரை இந்த அறையில் வரவழைத்துப் பார்க்கிறீர்களா?" என்று வினவினுர்.

தெய்வ:—"வேண்டாம் வேண்டாம். அவர் இருக்கிற அத்துக்ககரமான அறையிலேயே அவருக்குத் தேறு தல் கூறவேண்டும். ஒரு சங்கதி தங்களிடம் கூறு கிறேன். அது கடைசி வரையில் இரகசியமா யிருக்க வேண்டும். அதாவது அவர் துரைத்தனத்தாரால் பூரண மன்னுப்படைவார் என்ற நம்பிக்கை யுண்டு" என்றுள்.

கவர்:—ஆம் ஆம். தெரிந்துகொண்டேன். அது நடக்க வேண்டிய சடங்கே யன்றி வேறில்லை. அரசருக்கு ஒரு மனுவெழுதி யனுப்பவேண்டியதே. என்னுல்

ஆகவேண்டிய வேலை, அல்லது உதவி ஏதேனு மிருந்தால் சந்தோஷமாய்ச் செய்ய ஆயத்தமா யிருக்கிறேன்.

தெய்வ:—"ஆ! ஆம் ஆம். நீர் ஒரு உதவி செய்யலாம். அதாவது அவருக்காக அரசருக்கு ஒரு மனு அனுப்பட்டிருப்பதாகவும் அது பூரண மன்னுப்பைக் கொண்டு வருமென்றும் தாங்கள் துரைத்தன உத்தியோகஸ்தர் மூலமாய் இரகசியமா யறிந்ததாய்க் கூறினல், நான் கூறுவதோடு அவருக்கு அது பூரண நம்பகத்தையும் சந்தோஷத்தையும் உண்டாக்கும். எப்படியும் பூரண மன்னுப்பு வரப்போவது நிச்சயம். இந்த உதவி மட்டும் தாங்கள் செய்வதானல் தங்கள் அன்பார்ந்த செய்கையைப் பற்றி என் பெரிய தந்தையாகிய சுகசிங்கம் பிரபுவினிடம் நான் கூறத் தவிரமாட்டேன்'' என்றாள்.

இம்மொழிகளைக் கேட்ட கவர்னர் மிக்க ஆனந்தமடைந்து, இனி நமக்கு மிக்க செல்வவந்தாகிய பிரபுவின் சினேகமே கிடைத்துவிட்டது. அவர் ஒரு வார்த்தை கூறினல் நாம் ஒரு மாகாண கவர்னராகவே ஆய்விடலாம் என்று கருதி தான் கால்மேல் நிற்பதையும் தலைமேல் நிற்பதையும் அறியாதவனுகி பலதரம் தெய்வயானைக்கு வந்தனமளித்து,

"சீமாட்டியே தாங்கள் இன்னும் அதிகமாய் ஒன்றும் அடியேனுக்குக் கூறவேண்டாம்; தங்கள் தயவும் பிரபுவின் தயவு மிருந்தால் எனக்குப் போதும். தேவராயருக்கு எவ்வளவு தேறுதல் கூறவேண்டுமோ அவ்வளவும் நான் பூரணமாய்க் கூறச் சித்தமா யிருக்கிறேன். தாங்கள் இனி ஆல

சிய மின்றி தங்கள் கணவரைப் போய்ப்பார்க்கலாம்'' என்று கூறினர்.

உடனே இருவரும் தேவராயன் இருக்கும் அறைக்குச் சென்றார்கள். கவர்னர் அவளை யறைக்குள் விட்டு விட்டு கதவை மூடிக்கொண்டு உடனே திரும்பிவிட்டான். கவர்னர் சென்றதே, தேவராயன் தன் மனைவியை நோக்கி மிக்க ஆவலோடு "ஆ! வந்தாயா? என்ன சங்கதி கொண்டு வந்தாய்?'' என்றான்.

தெய்வ:—"நல்ல சந்தோஷ சங்கதியே. இதோ பார்'' என்று தன் மடியிலிருந்து ஒரு கடிதத்தை யெடுத்து அதன் கடைசியில் எழுதி யிருந்த சில வார்த்தைகளை யவனுக்குக் காட்டினாள்.

அவன் அதைக் கண்டதும் மிக்க சந்தோஷ மடைந்தான். நேயர்களே! அது என்ன கடிதம் என்று கருதுகிறீர்கள்? இளவரசனிடம் இருந்து எழுதி வாங்கிய பத்திரத்தைப்போல் வேறொன்று எழுதிக்கொண்டு அதில் இளவரசன் "நான் இதை யெழுதிக் கொடுத்த இப்பத்திரத்தில் கூறியபடி தேவராயனுக்கு பூரண மன்னிப்பளிக்க வேண்டும்'' என்று எழுதிக்கொண்டான். இது முழுதும் கள்ளக் கடிதமே.

தேவராயன் அதைக் கண்டதும் மிக்க சந்தோஷ மடைந்து, "ஆ கடவுளே! நான் காப்பாற்றப் பட்டேன்'' என்றான்.

தெய்வ:—ஆம். நீ காப்பாற்றப் பட்டாய். இன்று காலை இளவரசர் என்னிடம் ஒருமணி நேரம் பேசிக்கொண்டிருந்தார். பார்ப்பவர்கள் இதில் ஏதோ இரகசிய மர்மம் இருக்கிறதென்று சந்தேகப்படலாகா தென்பதே

அவர் அபிப்பிராயம். அதனால் அவர் ஒரு தந்திரமான ஏற்பாடு செய்திருக்கிறார்.

தேவராயன் ஆவலோடு "என்ன ஏற்பாடு? என்ன ஏற்பாடு?" என்று கேட்டான்.

தெய்வ:—"இளவரசன் எண்ண மென்னவெனில் நீ ஒரு சாதாரண குற்றவாளி போலவே யாவராலும் முடிவு வரையில் கருதப்பட வேண்டும். நீ தூக்குமரத் தடியில் நின்று உன் கழுத்தில் கயறு மாட்டப்பட்ட பின் தூக்கிற் போடப்படும் சமயம் பூரண மன்னிப்புப் பத்திரம் அங்கு வரவேண்டும் என்பதே. அப்படியும் இளவரசன் இரண்டு வழிகள் கூறியிருக்கிறார். அதாவது ஒன்று இப்போதே உன் மரண தண்டனையை மாற்றி விடுகிறார். ஆனால் அதற்குப் பதில் மூன்று வருடம் கடின காவலில் இருக்கவேண்டும். மற்றொன்று தூக்கிற் போடப்படும் சமயம் வரையில் நீ பொறுத்துக் கொண்டிருக்கவேண்டும். அப்போது பூரண மன்னிப்புப் பத்திரம் வரும். இதில் எது உமக்குப் பிரியமோ அப்படிச் செய்யும்படி கூறினர்" என்றாள்.

தேவராயன்:—"நீ பின்னால் கூறியதே சரி. நமது மனதிற்கு உண்மை தெரிந்திருக்கிற வரையில் அக்கஷ்டத்தைப் பொறுத்துக்கொண்டிருக்கலாம். பிறகு நாம் பேசாமல் பாஞ்சால நாட்டிற்குப் போய்விடலாம்" என்றான்.

தெய்வயானை மிக்க சந்தோஷத்தோடு "ஆம். ஆம். நானும் அப்படித்தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன். இதுமட்டு மல்ல. இளவரசர் இன்னொன்று கூறினர். அதாவது நீ கடைசியில் எப்படியும் மன்னிக்கப் படுவாயென்று, இச்சிறைச்சாலை கவர்னருக்கு இரகசியமாய்த் தெரிவிக்கப்

போவதாய்க் கூறினர். ஏனெனில் அவர் இரகசியமாய் உமக்கு அச்சங்கதியைக் கூறினால் உமது மனம் தேறுதலடையுமென்பது அவர் எண்ணம்'' என்றாள்.

தேவ:—''ஆ! நீ மிக்க சாமார்த்தியமாய் இவ்வேலையை முடித்தாய். நான் விடுதலையடைந்ததே என் நன்றியை யவசியம் காட்டுவேன்'' என்றான்.

அதன் பிறகு அவள் தன் கணவனிடம் விடைபெற்றுக்கொண்டு, கவர்னரைக் கண்டு அவருக்கு வந்தனமளித்து மிக்க தந்திரமாய்ப் பேசிவிட்டு சிறைச்சாலையை விட்டேகினாள்.

அன்று பிற்பகல் கவர்னர் தேவராயன் அறைக்குச் சென்று, சாதாரணமான க்ஷேம சங்கதிகளை விசாரித்தபின், ''நான் உமது மனம் தேறுதலடையத் தக்க ஒரு சங்கதி கூற விரும்புகிறேன். ஆனால் அதனால் என் தொழில் முறைமையில் நான் தவறிவிட்டதாய்க் கருதப்பட மாட்டேனென்று நினைக்கிறேன்'' என்றார்.

தேவராயன் ஆவலோடு ''மிக்க வந்தன மளிக்கிறேன். என்ன சங்கதி? தயவுசெய்து கூறுங்கள்'' என்றான்.

சிறைச்சாலை கவர்னர்:—''உண்மை யென்னவெனில், அடியேனுக்கு இராஜ சபையிலுள்ள இரண்டொருவர் கொஞ்சம் தெரியும். அவர்கள் மூலமாய் இரகசியமான ஒரு சங்கதி என் செவிகளில் விழுந்தது. அதாவது கடைசி சமயத்தில் தங்களுக்குக் கட்டாயம் பூரண மன்னிப்பு கிடைக்குமென்பதே. ஆனால் இச் சங்கதி முடிவு வரையில் மிக்க இரகசியமாகவே யிருக்க வேண்டும். ஆகையால் தங்கள் நண்பர்களிடமாவது இங்குள்ள காவலர்களிடமாவது ஒரு வார்த்தைகூட வெளியிடலாகாது'' என்றார்.

186544

**தேவா:**—ஆ! தெரிந்துகொண்டேன். எனக்கு அதிகமாய் ஒன்றும் கூறவேண்டாம். தங்கள் அன்பிற்குத் தக்க நன்றியைக் காட்டாமல் போகமாட்டேன்.

இதற்கிடையில் தெய்வயானை தேவாாயன் சந்தோஷமடைந்ததுபோல், தானும் சந்தோஷத்தோடு வீடுபோய்ச் சேர்ந்தாள். இரவு ஒன்பது மணிக்குச் செல்வநாதன் அவளைக் காணவந்தான்.

தெய்வயானை யவனை மரியாதையோடு வரவேற்று "நான் என் கணவனைக் கண்டு பேசினேன். அருமைநாதம் பிரபுவின் சங்கதியை மெதுவாய்ப் பிரஸ்தாபித்து நீ கொடுத்த கடிதத்தையும் காட்டினேன். அதோடு அவர் வேறெந்த மாதின்மேலாவது காதல் கொண்டிருந்தாலும் நான் அதற்காக அவர்மேல் வருத்தங் கொள்வதில்லை யென்று பிரமாணம் செய்தேன். அவர் அருமைநாதம் பிரபுவின் விஷயத்தைப் பற்றி மிக்க விசனப்பட்டார். ஆனல் அதைப் பற்றி தனக்கு ஒன்றுமே தெரியாதென்றும் தன்மேல் இத்தகைய வஞ்சம்தீர்த்துக்கொள்ள நினைக்கக்கூடிய ஸ்திரீ யாருமில்லை யென்றும், அக்கடிதத்தை யெழுதியது யாரென்று தனக்கு விளங்கவில்லை யென்றும் கூறினர். அவர் முகக் குறியால் அவர் கூறியவை யுண்மையே யென்று எனக்கு அய்யமின்றி விளங்கியது. என் கணவன் வேறு ஸ்திரீயின் மேல் அன்புகொள்ளவில்லை யென்று தெரிந்ததற்காக நான் சந்தோஷ மடைந்தேனாயினும் மதுரைநாயகம் பிரபுவிற்கு அவர் தந்தை விஷயத்தில் கொஞ்சமாவது சகாயம் செய்வதற்கில்லாமற் போனதைப்பற்றி மிக்க விசனமே யடைகிறேன்" என்றாள்.

செல்வநாதன் யாவும் கேட்டபின் "ஆயினும் தாங்கள் எடுத்துக்கொண்ட சிரமத்திற்காக மிக்க வந்தன மளிக்கி

றேன். தயவு செய்து நான் கொடுத்த அக்கடிதத்தைக் கொடுத்துவிடுகிறீர்களா? அது இன்னொரு சந்தர்ப்பத்தில் எனக்கு உபயோகப்படும்'' என்றான்.

தெய்வயானை யவன் கொடுத்த அக்கடிதத்தை யப்போதே தீக்கிரையாக்கிவிட்டாலும் மிக்க சாந்தத்தோடு ''அக்கடிதத்தை மேல்மாடியி லிருக்கும் என் பெட்டியில் வைத்திருக்கிறேன். இதோ எடுத்து வருகிறேன்'' என்று கூறிவிட்டு ஆசனத்தைவிட் டெழுந்துசெல்ல முயன்றாள்.

செல்வநாதன் "அம்மா அவ்வளவு தொந்திர வெடுத்துக்கொள்ள வேண்டாம். சாவகாசமாய் அக்கடிதத்தை யெடுத்துத் தபால் மூலமா யெனக் கனுப்பிவிடுங்கள். நான் போய்வருகிறேன்'' என்றான்.

தெய்வயானை உள்ளத்தில் மிக்க சந்தோஷ மடைந்து ''ஆகா, தடையின்றி அவசியம் அனுப்புகிறேன்'' என்று கூறிவிட்டுச் செல்வநாதன் விடைபெற்றுக்கொண்டு சென்றதே, "ஆ! மிக்க சாமார்த்தியவானென்று பிரக்யாதி பெற்ற துப்பறியும் சிங்கமே நம்மிடம் ஏமாந்துவிட்டான்'' என்று தனக்குத்தானே கூறிக்கொண்டாள்.

தெய்வயானை தன் சோபாவில் அமர்ந்து தன் நோக்கங்கள் ஜெயமடைவதைப் பற்றி சிந்தித்துக்கொண் டிருந்தாள். மணி கடைசியில் இரவு பதினொன் றடித்தது. அவள் உடனே யெழுந்து தானப்பனை விடுதலை செய்து வீட்டிலிருந்து வெளியேற்றக் கருதி இரகசிய வழியாய் அவன் இருந்த அறைக்குச் சென்று அவனைக் கீழிருக்கும் கூடத்திற் கழைத்துச் சென்றாள்.

**தானப்பன்:**—''அம்மா! இளவரசர் பக்கா ஆசாமி'' யென்றான்.

தெய்வ:—"ஆனால் அவர் தனக்கு உதவி செய்வோருக்குத் தாராளமாய்ப் பொருளளிப்பார். ஆனால் துரோகம் செய்வோர் மேலோ, பூரண வஞ்சம் தீர்த்துக்கொள் வார்" என்றாள்.

தானப்:—"நான் அவரிடம் தாராளமாய்ப் பரிசு பெறுகிற வர்களில் ஒருவனாகவே யிருப்பேன்" என்று கூறி விட்டு விடைபெற்றுச் சென்றான்.

தெய்வயானை "அப்பா சனி விட்டது" என்று நிம்மதி யடைந்து தன் பெரிய தந்தையின் போஜன அறையைக் கடந்து செல்லும்போது திடீலென்று அவள் மனதில் ஒரு விருப்பமுண்டாயிற்று. அதாவது எதற்கும் நம் பெரிய தந்தையின் இரகசிய அறைகளைப் போய்ச் சோதித்துப் பார்த்துவர வேண்டுமென்று ஆவல் கொண்டாள்; ஆனால் அங்கு செல்லும்போது அங்கிருந்த நிர்ச்சந்தடியால் அச்ச மடைந்து இருக்கட்டும் இன்னொரு சமயம் பார்த்துக்கொள் ளலா மென்று தன் அறைக்கு நேராய்ச் சென்றாள்.

---

## 64-வது அத்தியாயம்

மதனவல்லி இளவரசனைக் காண்பதாய் வாக்களித்த திங்கட்கிழமை இரவு ஒன்பது மணியாயிற்று. இளவரசன் தன் மாளிகையில் மிக்க அழகாய் அலங்கரிக் கப்பட்ட ஒரு அறையில் உட்கார்ந்துகொண் டிருக்கிறான். அந்த அறையின் ஒரு பக்கம் ஒரு வாசற்படி யிருக்கிறது. அது மிக்க பணச்செலவு செய்து அளவு மீறிய அழகோடு அலங்கரிக்கப்பட்ட இளவரசனுடைய படுக்கை யறை. ஆனால் அச்சமயம் அதன் கதவு மூடப்பட்டிருந்தது. இள

வாசன் கைக்கு எட்டக்கூடிய விடத்தில் ஒரு மேஜை மேல் உயர்தரமான பலவிதக் குடிவகைகளும் சிற்றுண்டிகளும் வைக்கப்பட்டிருந்தன. அவன் மதனவல்லியின் சந்தோஷச் சிந்தனையி லிருந்தான்.

மணி ஒன்பதடித்துப் பத்து நிமிடங்களானபோது கதவு திறக்கப்பட்டதும் ஒரு வேலைக்காரன் மதனவல்லியை யறைக்குள் விட்டு விட்டுக் கதவை மூடிக்கொண்டு சென்றான். இளவரசன் அவளைக் கண்டதே எழுந்து மிக்க அன்போடு வரவேற்று ஆலிங்கனம் செய்துகொண்டான். மதனவல்லி தன்னியற்கை வனப்பு போதாதென்று கண்களைக் கவரும்படியான அழகிய நாகரீகம் பொருந்திய உடைகளை யணிந்துகொண் டிருந்தாள். இளவரசன் "ஆ என் அருமையான காதலியே! உண்மையாகவே உன் அன்பு கிடைக்கும்படியான புண்ணியம் எனக்குக் கிடைக்கும் சமயம் வந்துவிட்டதா?" என்றான்.

மதனவல்லி "என் வாக்குத் தத்தத்தின்படி நான் இங்கு வந்திருக்கிறேன். தாங்கள் ஒப்புக்கொண்ட நிபந்தனைகளெல்லாம் கவன மிருக்கின்றனவல்லவா?" என்றாள்.

இளவர:—நீ யவற்றை யெல்லாம் மறுபடி கூறு. நான் மறுக்கத் தக்கது ஒன்றேனு மிராது.

மதன:—முதலாவது தாங்கள் ஒப்பியபடிக்கே வெளியில் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள மணம்புரிந்து கொண்டேன்.

இளவர:—ஆ! செல்லப்பன் அதிஷ்டசாலி.

மதன:—நான் தங்கள் அரண்மனையிலேயே வசித்துக்கொண்டிருப்பதற்காக என் கணவருக்கு அரண்மனையில் ஒரு கௌரவமான உத்தியோகம் அளிக்கவேண்டும்.

இளவர:—ஆகா காலைக்கே செல்லப்பனுக்கு அரண்மனை பிரதம காரியஸ்தராகிய பிரபு வேலையை யளிக்கிறேன். அவ்வேலை கொஞ்சகாலமாய்க் காலியா யிருக்கிறது. உன் கணவனே யதற்குத் தகுதியானவன்.

மதன:—எனக்கும் ஒரு கௌரவப்பட்டம் இருக்கவேண்டும்.

இளவர:—ஆகா. தடையின்றி அதையும் நிறைவேற்றுகிறேன். இன்னும் என்ன நிபந்தனைக ளிருக்கின்றன?

மதன:—வேறொன்று மில்லை; இவ்வளவே.

இளவர:—அப்படியாயின் நீ பூரண திருப்தி யடைந்தா யல்லவா? இனி நீ என் சொந்தந்தானே?

மதனவல்லி மிக்க சந்தோஷத்தோடு, "ஆம் ஒரு தடையுமில்லை" என்றாள். இச்சந்தர்ப்பத்தில் காதலரிருவரும் மிக்க ஆனந்தத்தோடு ஒருவரை யொருவர் ஆலிங்கனம் செய்துகொண்டதையும் பின்னால் நடந்த விவகாரங்களையும் நாம் கூறவேண்டுவதில்லை.

அன்று இரவு சுமார் நான்கு மணிக்கு மதனவல்லி இளவரசன் மாளிகையை விட்டுப் புறப்பட்டு ஒரு வாடகை வண்டி யேறித் தன் மாளிகைபோய்ச் சேர்ந்தாள். அங்கு சென்றதே அவள் கணவனாகிய செல்லப்பன் அவளை யெதிர் கொண்டழைத்து வீட்டுக்குள் கொண்டு சென்றான்.

இருவரும் மனங் கலந்து பேசியபோது, மதனவல்லி தங்களுக்கு இனி கிடைக்கும் கௌரவப் பதவிகளையும் செல்வத்தைப் பற்றியும் தன் கணவனுக்குக் கூறினாள். இருவரும் கடைசியில் தங்கள் இருவர் பரஸ்பர அன்பும் உறுதியாயிருக்கிற வரையில் நாம் சந்தோஷமாகவே யிருக்கவேண்டு

மென்று இருவரும் தீர்மானித்துக் கொண்டார்கள். இரவு இருவரும் நித்திரை போய்விட்டார்கள்.

மறுநாட் பகல் இராஜாங்கத்திலிருந்து இரண்டு உத்திரவுகள் வந்தன. ஒரு உத்திரவு செல்லப்பன் ஒரு பிரபு பட்டம் அளிக்கப்பட்டான். இரண்டாவது உத்திரவு அவன் இராஜ மாளிகையின் பிரதம காரியஸ்தனு யமர்த்தப்பட்டதாகவும் அடுத்தநாள் முதல் அவன் குடும்பத்தோடு அரண்மனையில் அவனுக்கென்று விடப்பட்ட விடுதியில் வந்து வசிக்கலாமென்றும் நாளைக்கே வந்து தன் உத்தியோகத்தையேற்றுக் கொள்ளலாமென்றும் கூறியது.

மறுநாள் இச்சமாசாரத்தைத் துரைத்தன கெஜட்டில் படித்த ஜனங்களனைவரும் மிக்கவியப்படைந்து விட்டார்கள். ஆனல் செல்லப்பன் மனைவி மிக்க அழகுடையவளா யிருப்பதே யிதற்குக் காரணமென்று எண்ணிக்கொண்டார்கள். அப்படி யிருந்தாலும் ஒருவருக்கும் அதைப்பற்றி வெளியில் பிரஸ்தாபிக்கவாவது அந்தச் சதி புருடர்மேல் எள்ளளவு வெறுப்பு காட்டவாவது தைரியமில்லை. ஆகையால் அன்று முதல் செல்வவந்தர்கள், பிரபுக்கள் இராஜ விசுவாசிகள் முதலியவர்களனைவரும் அவர்களை வந்து கண்டு மரியாதை செய்யத் தொடங்கினர்கள்.

ஒரு வாரத்திற்குள் சதி புருடர் இருவரும் இராஜ மாளிகையில் தங்களுக்கு விடப்பட்ட விடுதியில் போயமர்ந்தார்கள். அவர்களோடு கூடவிருந்த தோழிகளும் வேலைக்காரனும் கூடவே சென்றூர்கள்.

* * * *

* * *

அடுத்த ஞாயிற்றுக்கிழமை இரவு பத்து பதினேரு மணிக்கு பிரதம சிறைச்சாலையின் எதிரிலுள்ள மைதானத்

திலும் சிறைச்சாலையின் ஓரங்களிலும் திரளான ஜனங்கள் வந்து கூடிவிட்டார்கள். ஏனெனில் மறுநாள் திங்கட் கிழமை காலை ஏழரை மணிக்கு ஒரு ஆளைத் தூக்கிற்போடப் போகிறார்கள்.

சிலர் "இதோ இந்த வழியாய்த்தான் அவனை வெளி யில் கொண்டுவருவார்கள்" என்றார்கள். சிலர் "அதோ அங்குதான் தூக்குமரம் நாட்டப்படும்" என்றார்கள். இவ் வாறு ஜனங்கள் அதைப்பற்றிய விவரங்களைப் பேசிக்கொண் டிருந்தார்கள். நேயர்களே! அவ்வாறு மறுநாள் திங்கட் கிழமை தூக்கிற்போடப்படப் போகும் ஆசாமி நமது தெய்வ யானையின் கணவனாகிய தேவாயனே.

நியாயாதிபதிகள் அளித்த மரண தண்டனை அப்படியே நிறைவேற்றப்பட வேண்டுமென்று துரைத்தன உத் திரவு வந்துவிட்டது. அதே இரவு பதினொரு மணிக்கு ஒரு இரட்டைக் குதிரைவண்டி அங்கு வந்தது. அதிலிருந்து ஆறு பேர் கீழே யிறங்கினார்கள். அவர்களில் ஒருவன் வண்டியின்கூட வந்த நாணயமான உடை யணிந்த வேலைக் காரனை நோக்கி "நீ நாளை காலை ஒன்பது மணிக்கு இங்கு வா" என்றான்.

வேலைக்காரன்:—"அப்படியே பிரபு" என்றான்.

இன்னொருவன்:—"குமாரவேல் பிரபு! அவனை நாளை ஒன் பது மணிக்கு ஏன் வரச் சொன்னீர்? 8-5, 8-10-க் குள் எல்லா விஷயமும் முடிந்து விடுமே" என்றான்.

குமாரவேல் பிரபு:—"நாம் அவனைத் தூக்கிற் போட்டபிறகு சவம் கீழே யிறக்கப்படு மட்டு மிருக்கவேண்டும்" என்றார்.

மற்றவன்:—"ஆ அப்படியாயின் சரிதான். நான் அதை மறந்துவிட்டேன். எல்லாச் சடங்குகளும் முடியுமட் டும் இருந்து பார்க்கவேண்டியதே" என்றான்.

யாவரும் நகைத்தார்கள். பிறகு யாவரும் அம் மைதானத்தின் ஓரத்திலிருந்த ஒரு ஹோட்டலுக்குச் சென்றார்கள். அக்கூட்டம் குமாரவேல் பிரபுவும் அவரைப் போன்ற ஐந்து வாலிப நண்பர்களுமே. இவர்களை ஹோட்டலிலேயே விட்டு விட்டுச் சிறைச்சாலையிலிருக்கும் தேவாரயனைக் கவனிப்போம்.

இரவு பதினொரு மணி யிருக்கும். தேவாரயன் போஜனம் செய்துகொண் டிருக்கிறான். அவன் எதிரில் நாணயமான நல்ல ஆகாரமே வைக்கப்பட்டிருக்கிறது. அவன் நாம் நாளை காலை கொல்லப்படப் போகிறோமே என்ற எண்ணம் சற்றும் இல்லாதவன்போலவே நிம்மதியோடும் பிரியத்தோடும் பொசித்துக்கொண் டிருக்கிறான். தனக்குப் பூரணமன்னிப்பு கடைசி சமயத்தில் எப்படியும் வரும் என்று அவன் பூரணமாய் நம்பிக்கொண் டிருக்கிறான். அதில் அவனுக்கு எள்ளளவு சந்தேகமு மில்லை. ஆகையால் தனக்குப் பூரணவிடுதலை கிடைப்பதை ஆலசியம் செய்துகொண்டிருக்கும் அச்சடங்கு சீக்கிரம் நடந்தேறிவிட வேண்டுமென்று ஆவலோடு எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறான்.முன்னடி அந்தக் கட்டளை வந்துவிட்டால் யாவர்க்கும் பலவித சந்தேகங்க ளுண்டாகுமென்றும் அதனால் எல்லா சடங்குகளும் முடிந்து கடைசியில் கழுத்தில் கயறு மாட்டும் சமயம் திடீலென்று அக்கட்டளை வரும் என்று தன் மனைவி கூறியதை அவன் பூரணமாய் நம்பிக்கொண் டிருக்கிறான்.

தெய்வயானை தினந்தோறும் வந்து அவனைக் கண்டு பேசிப் போய்க்கொண் டிருந்தாள். அவள் ஒவ்வொரு முறையும் இளவரசன் அவன்மேல் அதிகமாய் இரக்கம் கொண்டிருப்பதாகத் தேறுதல் கூறி, நமக்குக் கட்டாயம் மன்னிப்புக் கிடைக்கும் என்று அவன் உறுதியாய் நம்

பும்படிச் செய்தாள். அக்தோ துஷ்ட ஸ்திரீகளின் வஞ் சனைகளையும், மாயஜாலங்களையும் கண்டறிய வல்லுனர் யார்? இதற்கே கடலாழங் கண்டாலும் ஸ்திரீகளின் நெஞ்சாழத் தைக் காணமுடியாதென்று கூறப்பட்டிருக்கிறது.

இதோடு தெய்வயானை செய்த மாயஜாலமாகிய தந் திரத்தால் சிறைச்சாலையின் கவர்னரே தேவராயனுக்குக் கடைசி சமயம் மன்னுப்பு வந்துவிடுமென்று பூரணமாய் நம்பிக்கொண்டு, கடைசி சமயத்தில் தூக்கிற் போடப்படும் ஆளுக்கு மனத்தேறுதல் கூறும் குருவிடம் கூட ஜாடை யாய் அச்சங்கதியைக் கூறிவிட்டார். இக்காரணங்களால் தேவராயன் சற்றும் திகிலாவது மனச்சோர்வாவது பய மாவது இல்லாதவனுகவே காணப்பட்டான். அவன் நிம் மதியாய்ப் பொசித்துவிட்டு நித்திரை போயினுன்.

மறுநாள் காலை ஐந்து மணிக்கெல்லாம் சிறைச்சாலை யின் எதிரிலுள்ள மைதானத்தில் பெருங் கூட்டமான ஜனங் கள் கூடிவிட்டார்கள். தூக்கு மரத்தை நாட்டத் தச்சர் களும் ஆயத்தமாய் வந்துவிட்டார்கள். அவர்கள் உடனே வேலைசெய்ய ஆரம்பித்து ஆறு மணிக்கெல்லாம் தூக்கு மரத்தை நாட்டிவிட்டார்கள். ஜனங்கள் கோஷ்டத்தோடும் ஆவலோடும் அதைப் பார்த்துக்கொண் டிருந்தார்கள். அவ் வளவு பெருங் கோஷ்டத்திலும் கொலைத் தண்டனை யடை யப்போகும் தேவராயன் ஒரு கவலையுமின்றி நிம்மதியோடு நித்திரைசெய்துகொண் டிருக்கிறுன்.

அதி காலையிலிருந்து பூரணக் கறுப்புடை யணிந்திருந்த ஒரு கடித்த மனிதன் கையில் ஒரு பலமான கழியைப்பிடித் துக்கொண்டு சிறைச்சாலையின் வாயிற்படி யருகில் பதுங்கிக் கொண்டிருந்தான்

அவன் தூக்குமரம் நாட்டப்பட்டதே மெதுவாய் நடந்து அம்மேடை யருகிற் சென்று ஒருவரோடும் பேசா

மல், நடக்கும் அமக்களங்களில் எதையும் கவனியாமல் மரம் போல் நின்று கொண்டிருக்கத் தொடங்கினான்.

சுமார் ஏழு மணிக்குத் தேவராயன் நித்திரையினின்று விழித்துக்கொண்டான். அப்போதும் அவனுக்குத் தேறுதல் கூறவந்த குரு அங்கு எழுப்பியதால் எழுந்தான்.

குரு:—"நன்றாய் நித்திரை செய்தாயா?" என்றார்.

தேவரா:—என் ஜன்மத்தில் இவ்வளவு சுகமாய் எப்போதும் நித்திரை செய்யவில்லை. இதோ எழுந்து ஆயத்தமாயிருக்கிறேன்.

குரு நான் இதோ பத்து நிமிடங்களில் வருகிறேன் என்று கூறிச்சென்றார்.

குரு திரும்பிவந்தபோது தேவராயன் "நகர அதிகாரி ஷெரிப் வந்துவிட்டாரா?" என்றான்.

குரு "இன்னும் வரவில்லை. நாம் கடவுளைப் பிரார்த்திக்கலா மல்லவா?" என்று குறிப்பாய்க் கேட்டார். தேவராயன் "இச்சந்தர்ப்பத்தில் அது அவசியமென்று தங்களுக்குத் தோன்றுகிறதா?" என்றான்.

குரு:—கடவுளைப் பிரார்த்திப்பது எச்சமயத்திலும், எல்லா சந்தர்ப்பங்களிலும் மிக்க நல்லதே.

தேவ:—நான் எப்படியும் பூரண மன்னிப் படைவேனென்று தாங்கள் நம்புகிறீர்களல்லவா?

குரு:—"கவர்னர் என்னிடம் அப்படித்தான்கூறினர். அவர் தக்க நம்பிக்கையும் ஆதாரமுமின்றி ஒன்றை யஜாக்கிரதையாய்க் கூறுகிறவ ரல்லவென்று எனக்குத் தெரியும்" என்றார்.

தேவராயன் "ஷெரிப் வந்தால் நான் அவரைக் கேட்பேன்" என்றார்.

குரு "நண்பரே! இது நம்பிக்கைத் துரோகமாகும். நாங்கள் இச்சங்கதியை யுன்னிடம் முன்னுடி கூறியதாய் நீ வெளிப்படுத்தி விட்டால் எங்கள் இருவர் பிழைப்புகளும் போய்விடும்" என்றூர்.

தேவரா:—ஆ! அதை மறந்துவிட்டேன். தயவு செய்து கவர்னரை நான் அழைப்பதாய் அவரிடம் கூறுகிறீர்களா?

குரு:—"ஆகா. அப்படியே கூறுகிறேன்" என்று சொல்லி விட்டுச் சென்றூர்.

தேவராயன் மனக்கலவர மடைந்து, "ஒருகால் இளவரசன் இப்படிச் சொல்லிக்கொண்டே யிருந்து கடையில் மோசம் செய்துவிடுவானே? தெய்வயானேயே ஆதிமுதல் நம்மை மோசம் செய்யக் கருதி யிப்படி நடக்கிருளோ? கடைசியில் மன்னுப்பு வராமலே நாம் தூக்கிற் போடப்படுவோமோ? அப்போது கடைசி சமயத்தில் நாமென்ன செய்வது? நாம் வாய் திறப்பதற்குள் கொலையாளி கயற்றை யிழுத்து விடுவானே" என்று சிந்தித்ததும் அவன் மனதிலுண்டான குழப்பத்திற்கும், திகிலுக்கும், துயரத்திற்கும் அளவே யில்லை. அவன் மனவேதனை பொறுக்கமுடியாமல் அலறிக் கூச்சலிட நினைத்தான். அச்சமயம் குரு கவர்னரை யழைத்துக்கொண்டு அறைக்குள் பிரவேசித்தார்.

அவர்கள் இருவர் முகங்களிலும் தோன்றிய சந்தோஷக் குறியைத் தேவராயன் கண்டதே, ஆனந்த மடைந்தான். தான் சந்தேகம் கொண்டதற்காகத் தன்னைத்தானே வைது கொண்டான். கவர்னர் அவன் காங்களை யன்போடு பற்றிக்கொண்டு, "தேவராயரே ஸீல் செய்யப்பட்ட ஒரு கடித உறை இராஜாங்கத்திலிருந்து ஷெரிப் பெயருக்கு இரகசியமாய் என்னிடம் வந்திருக்கிறது. நீர் அவசரப்

பட்டு அதை வெளியிட்டு விட்டாலோ என் உத்தியோகம் போய்விடும்" என்ருன்.

தேவாராயன் "நீங்கள் செய்யும் உதவிக்கு நான் இத்த கைய கைம்மாறு என் பிராணன்போயினும் செய்யேன்: அது என் மன்னுப்புப் பத்திரம் தானே?" என்ருன்.

கவர்:—"இச்சமயத்தில் வேறென்றுமாயிராது. அவர் அதையென் எதிரில்கூடத் திறக்கமாட்டார். ஆனல் அதைப்பற்றி எனக்கு எள்ளளவு சந்தேகமுமில்லை" என்ருர்.

இதற்குள் வெளியில் நடக்கிற சங்கதியைக் கவனிப்போம்.

ஜனக் கூட்டமோ இன்னமாதிரியென்று சொல்லமுடியாது. பணக்காரர், ஏழைகள், சிறியர் பெரியர், ஆண் பெண் என்ற வித்தியாசமின்றி அனைவரும் அம் மைதானத்தில் நிறைந்துவிட்டார்கள். சிறைச்சாலையின் எதிரில் உள்ள வீடுகளில் இருக்கும் ஜனங்கள் தங்கள் வீட்டின் சாளரங்களைத் திறந்துகொண்டு மிக்க ஆவலோடு தூக்கு மரத்தைப் பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

சற்றுநேரங் கழித்து, எட்டேகால் மணிக்கு நகர ஷெரிப்பும் அவருடைய உதவி உத்தியோகஸ்தரும் கவர்னரோடு தேவாராயன் அறைக்கு வந்தார்கள். அச்சமயம் கவர்னரின் வேலைக்காரன் ஒருவன் சீல் செய்த ஒரு கடித உறையைக் கொண்டுவந்து ஷெரிப்பிடம் கொடுத்தான். அவர் அதை யெடுத்துக்கொண்டு ஒரு தனி யறைக்குச் சென்று, அங்கு அதை வாசித்துப் பார்த்துத் திரும்பி மற்றவர்களெதிரில் வந்தார். அவர் முகக்குறியால் ஒன்றும் தோன்றவில்லை.

ஷெரிப் கவர்னரை நோக்கி "கடந்த சனிவாரம் மரண தண்டனையை நிறைவேற்ற ஒரு ஆளும் அகப்படவில்லை யென்று எனக்குத் தெரிந்தது" என்றார்.

கவர்:—"அந்த விஷயம் இப்போதும் அதே நிலைமையில் தான் இருக்கிறது. தாங்கள் வரச் சற்று நேரத்திற்கு முன்புகூட அந்த முக்கியமான வேலைக்கு ஒருவரும் ஒப்பி வரவில்லை யென்று சிறைச்சாலை காவலர்கள் என்னிடம் புகன்றார்கள்" என்றார்.

ஷெரிப்:—"அப்படியாயின் இச்சங்கதியை வெளியிலிருக்கும் ஜனங்களுக்கு அறிவித்துவிட வேண்டும். நான் உடனே சென்று அக்கடமையைச் செய்கிறேன்" என்று கூறிவிட்டு, தன் துணை உத்தியோகஸ்தரையும் கவர்னரையு மழைத்துக்கொண்டு தூக்குமரம் நாட்டப்பட்டிருக்கும் மேடை யருகிற் சென்று அதன்மேல் ஏறி நின்றார்.

உடனே அங்கிருந்த ஜனங்களெல்லாம் அவரைக் கண்டதே தங்கள் சம்பாஷணைகளை யெல்லாம் விட்டு விட்டுச் சந்தடியின்றி ஆவலோடு அவர் வாக்கையே யெதிர் பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

ஷெரிப்:—"ஓ ஜனங்களே! இங்கு இப்போது நடக்கவேண்டிய பிரதானமான கொலைத் தொழிலைச்செய்ய இதுகாறும் ஒருவரும் அகப்படவில்லை. இப்போ திங்கிருக்கும் ஜனக் கூட்டத்தில் யாராவது அத்தொழிலை யேற்றுக்கொண்டால், அந்த ஆள் எத்தகைய குற்றத்தைச் செய்துவிட்டிருந்தாலும் சட்டப்படி யவனுக்கு பூரண மன்னிப் பளிப்பதாய் வாக்குறுதி கூற எனக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இப்போது வெளியிடுகிறேன். ஆகையால் யாராவது இத்

தொழிலே யேற்றுக் கொள்வதாயின் அவர்கள் அச்சமின்றி வெளிவரலாம்'' என்று கூறினர்.

ஷெரிப் அவ்வாறு கூறியதே "ஓ நான் இந்நிபந்தனைப்படி இவ்வேலையை யொப்புக் கொள்கிறேன்'' என்று ஒரு சத்தம் கிளம்பியதும், நாம் முன்னமே கூறிய கறுப்புடை யணிந்து மேடை யோரத்தில் நின்றிருந்த அத்தடித்த மனிதன் சட்டென்று மேடைமேல் ஏறி ஷெரிப் எதிரில் நின்றான்.

அச்சமயம் மணி எட்டடித்தது. உடனே ஷெரிப் தன் உதவியாட்களை அழைத்துக்கொண்டு குருவும் குற்றவாளியுமிருக்கும் அறைக்குச் சென்றார்.

தேவாரயன் தன் மன்னிப்புப் பத்திரம் ஷெரிப்பின் ஜேபியில் இருக்கிறதென்று நிச்சயமாய் நம்பிக்கொண்டிருப்பதால் சற்றும் மனச் சஞ்சலமின்றி வந்தவர்களுக்கு வந்தன மளித்தான். ஷெரிப் குருவை நோக்கி "உம்மிடம் ஒரு நிமிடம் சம்பாஷிக்க வேண்டும்'' என்றார்.

தேவாரயன் அவர்களிருவரும் ஒருபுறமாய்ச் சென்றதையும் ஷெரிப் தன் ஜேபியிலிருந்து ஒரு சீல் செய்த கடிதத்தை யெடுத்து குருவிற்குக் காட்டுவதையும் கண்டு "ஆ! அதுவே என் மன்னிப்புப் பத்திரம் என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

அதற்குள், கொலைஞன் அவன் கரங்களைப் பின்புறம் கட்டுவதற்காகக் கயறைக் கையிலெடுத்துக்கொண்டு தேவராயனருகிற் சென்று இரகசியமாய் "தாங்கள் சற்றும் மனக்கலக்க மடையவேண்டாம். தங்கள் மன்னிப்புப் பத்திரம் ஷெரிப்பின் ஜேபியிலிருக்கிறது எனக்குத் தெரியும்'' என்றான்.

அவன் குரலைக் கேட்டதே தேவாரயன் அவன் தானப்பனே யென்று அறிந்து கொண்டதும் மிக்க வியப்படைந்து "ஆ! நீயா? அப்பத்திரத்தை நீ பார்த்தாயா?'' என்றான்.

தானப்:—ஷெரிப் மற்ற உத்தியோகஸ்தருக்கு அதைக் காட்டும்போது பார்த்தேன். அதின் ஓரத்திலிருந்த குறிப்பைப் பார்த்தேன்'' என்றான்.

தேவராயன் ஆவலோடு "அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது?'' என்றான்.

தானப்பன், "அக்குறிப்பில் இந்த மன்னுப்புப் பத்திரத்தை குற்றவாளியின் கழுத்தில் கயறு மாட்டி பலகையைத் தட்டும் சமயத்தில் தான் வெளியிடவேண்டும் என்று எழுதி யிருக்கிறது.'' ஆகையால் நீர் சற்றும் கலவர மடைய வேண்டாம். இன்னும் கால்மணியில் இச்சடங்கெல்லாம் ஒழிந்து நீர் பூரண மன்னுப்போடு இதை விட்டுச் செல்லலாம்'' என்றான்.

தேவ:—என் மனதிற்குத் தைரியமுண்டாக்க நீ இவ்வளவு சிரத்தை யெடுத்துக்கொண்டு எனக்கு இச்சங்கதியைக் கூறியதற்காக நான் மிக்க நன்றியுடையவனா யிருப்பேன்.

தானப்:—"நீர் என்னிடம் எப்போதும் பெருந்தன்மையாகவே நடந்துகொண் டிருக்கிறீர். உம்மைத் தூக்கிற் போடுவதென்றால் நான் மிக்க விசனமுறுவேன். இனி நாம் புறப்படவேண்டிய காலம் வந்துவிட்டது. இந்தச் சடங்கு ஒழிந்து விடட்டும்'' என்றான்.

தேவராயனுக்கு மன்னுப்பு கிடைத்திருக்கிறது என்பதில் சந்தேகமே யில்லாவிடினும் அச்சமயம் மனம் மட்டும் சற்று கலவரமாகவே யிருந்தது.

அதன் பிறகு தானப்பன் எல்லாம் ஆயத்தமாய்விட்டதென்று ஷெரிப்புக்குக் கூறினான். உடனே வாயிற்படியருகில் பேசிக்கொண்டிருந்த ஷெரிப்பும் குருவும் முன்பாக

வும் கைகள் பின்னல் கட்டப்பட்ட தேவாராயனும் அவன் பின்னல் கொலைஞனுகிய தானப்பனும் பின்னல் மற்றபேருமாய் சிறைச்சாலையை விட்டுப் புறப்பட்டார்கள்.

இவர்கள் வெளியில் புறப்பட்டதே கோயில் மணிகள் சத்திக்கத்தொடங்கின. ஜனங்கள் ஆரவாரமாய் கோஷ்டமிட்டார்கள். குருவோ தேவாராயனேடு பிரார்த்தனைசெய்தபோது உண்மையாகவே மரண மடையப்போகிற ஒருவன் மனதைத் தேற்றி அவனுக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கிறவர் போலவே மனப்பூர்வமாய் பிரார்த்தனை செய்தாரே யன்றி ஒப்புக்குச் செய்பவர்போல் செய்யவில்லை.

இவை யாவும் கண்ட தேவாராயன் மனம் கலக்கமடைந்து விட்டது. "இவை யாவும் சமீபத்தில் மரணம் நேரப்போகிற தென்றே குறிக்கின்றன. நாம் மன்னுப்படைவது உண்மையாயின் இத்தனை யார்ப்பாட்டங்களும் நடப்பதேன்? நாம் வீணுய் மயக்க மடைந்து விட்டோமோ? அல்லது நம்மை வஞ்சிக்கவே இப்படி யெல்லாம் நடக்கிறதோ. ஓகோ யாவும் பெருஞ் சூதே. நாம் அடியோடு ஏமாற்றப்பட்டோம்" என்று பெருந்திகி லடைந்தான்.

ஆனல் மறு வினுடியே அவன் மனம் சரியான நிலைமைக்கு வந்துவிட்டது. நமது மனைவி யவ்வளவு நிச்சயமாய்க் கூறி யிருக்கிருள். மேலும் கவர்னரே தனக்கு இரகசியமாய் அச்சங்கதி தெரிந்திருக்கிறதென்று நம்மிடம் மிக்க இரகசியமாய்க் கூறினர். ஷெரிப் மன்னுப்புப் பத்திரத்தைக் குருவிடம் காட்டியபோது நாமே கண்ணுறக் கண்டோம். இவை யாவும் போதாமல் கடைசியில் தானப்பனே அப்பத்திரத்தின் குறிப்பிலுள்ளதைக் கூறினுன். அப்படிக்கெல்லாம் இருக்கும்போது இது அடியோடு சூதா யிருக்காது; எல்லாம் சரியாகவே யிருக்கும்;

வேறொன்று மில்லை'' என்று தனக்குத்தானே கூறிக் கொண்டான்.

ஆகா! அச்சமயம் அவன் மனோவேதனை யிருந்த நிலைமை இத்தகையதெனக் கூறமுடியாது. அப்போதும் அம்மூடன் "நாம் இத்தகைய துஷ்ட வழிகளிற் செல்லாமல் இருக்கலாகாதா'' என்று மனஸ்தாப மடையவில்லை. "அய்யோ! நாம் ஏன் முதலிலேயே சந்தேகப்படாமற் போய்விட்டோமே. அய்யோ அப்படி யில்லாவிட்டால் மாரண தண்டனைக்குப் பதில் மூன்று வருட சிறைச்சாலை வாசத்தையாவது ஒப்பிக்கொண்டிருக்கலாமே. ஆயினும் இப்போதும் காரியம் கெட்டுப்போகவில்லை. முடிவில் அப்படி மோசம்போவதா யிருந்தால், தன் மனைவி கூறியபடி இளவரசன் பூரண மன்னுப் பளிப்பதாய்க் கூறிய நம்பகத்தையும், தன் மனைவி கூறிய விஷயங்களையும் ஷெரிப்பிடம் கூறித் தான் அங்கிபந்தனைப்படி மாரண தண்டனைக்குப் பதில் மூன்று வருடச் சிறைவாசத்தை யொப்புக்கொள்வதாய்க் கூறிவிடலாம் என்று தீர்மானித்துக் கொண்டான்.

நேயர்களே! அயோக்கியர்களும் துஷ்டர்களுமாகிய மூடர்களுக்குத் தங்கள் தீய செயல்களில் மிக்க தந்திர சாமார்த்திய மிருந்தபோதிலும், மற்றவர்களின் உண்மை யந்தரங்கத்தையும், நல்லது கெட்டது என்ற பாகுபாட்டையும், இப்போது நாம் செய்யப்போகும் இச்செய்கை நன்மையை விளைவிக்குமா அல்லது தீமையை விளைவிக்குமா என்ற வித்தியாசத்தையும் அறிகிற புத்தி நுட்பம் ஒருபோதும் இராது என்பது அனுபவம். அத்தகைய புத்தி யிருந்தால் அவர்கள் ஆரம்பத்திலேயே கெட்ட நடக்கைகளில் பிரவேசிக்க மாட்டார்கள். நீங்கள் இதைச் சற்று கவனித்துப் பார்த்தால் அனுபவத்தில் இது உண்மையே யென்றுணராகும்.

சிறைச்சாலையின் கடைசி வாயிற்படியைக் கடந்து மைதானத்தில் நுழையும்போது அங்கு நாட்டப்பட்டிருக்கும் கொலை யெந்திரமாகிய தூக்கு மரத்தையும் ஜனக்கூட்டத்தையும் அவர்களுடைய கோஷ்டத்தையும் கண்ட தேவராயன் ஆவி சோர்ந்து திகிலடைந்தான். அதை யறிந்த தானப்பன் "நீ கலவர மடையாதே. இந்த வீண் சடங்குகளெல்லாம் கால்மணி நேரத்தில் ஒழிந்துவிடும். பிறகு உனக்கு ஒரு மனக்கலக்கமு மிருக்கவேண்டிய காரணமில்லை" என்று தேறுதல் கூறினன்.

அதோடு அச்சமயம் ஷெரிப்பின் ஜேபியிலிருந்த பத்திரம் கொஞ்சம் வெளியில் தெரிவதைத் தேவராயன் பார்த்தான். ஆ! மன்னுப்புப் பத்திரம் அதோ இருக்கிறது என்று மறுபடி தைரிய மடைந்து தூக்குமர மேடையின்மே லேறினன். அவன் கரங்கள் பின்பக்கம் கட்டப்பட்டுத் தூக்கிற் போடப்பட ஆயத்தமா யிருந்தான். ஆனல் நமக்குப் பயமில்லை. இன்னும் பத்து நிமிடங்களில் நாம் பூரண சுயாதீனத்தோடு வெளியிற் செல்லலாம் என்று தைரியத்தோடிருந்தான்.

உடனே ஜனசமூகத்தில் ஒரு நிர்ச்சந்தடி யுண்டாகியது. அவன் குற்றம் ஜனங்களுக்குக் கோபத்தை மூட்டக்கூடியதல்ல. ஆதலால் ஆத்திரமும் கோபமுமான கோஷ்டங்கள் ஒன்றும் கிளம்பவில்லை. அச்சமயம் கோயில் மணிகள் அடிப்பது அவன் மனதில் பீதியை யுண்டாக்கியது. அவன் மனோநிலைமை பெரிய பீதியும் நடுக்கமும் குழப்பமுமாய்விட்டது. அப்போதும் தானப்பன் அவன் செவியில் தைரியத்தை விடாதே யென்ருன். ஆனல் அதே விநடி அவன் கழுத்தில் சுருக்குக் கயறு மாட்டப்பட்டது. அவன் மனம் பதைத்து என்னமோ கூற முயன்ருன். அதற்குள் அவன்

முகம் ஒரு குல்லாயால் மூடப்பட்டது. உடனே அக் கொலையாளியாகிய தானப்பன் என்ற சண்டாளன் தன் காத்தையெடுத்துக்கொண்டு, அப் பலகை மேடைமேலிருந்து மாப் படிக்கட்டுகளின் வழியாய்த் துரிதமாய்க் கீழிறங்கிச் செல்வதை யுணர்ந்தான்.

உடனே அவன் மனம் பெரிய வேதனைக்குள்ளாய் விட்டது. அதே விநாடி தன் பாதங்களின்கீழ் எதுவோ எந்திரம் இயங்குவதுபோலும் தான் நின்றுகொண்டிருந்த பலகை கீழிறங்குவதுபோலவும் தெரிந்தது. ஓ! அந்த இரண்டொரு விநாடிகளில் "அய்யோ கடவுளே! நான் மோசம் போய்விட்டேன். என் மனைவியே என்னைச் சதிசெய்துவிட்டாள்" என்று எல்லா உண்மையும் அவன் மனதிற் பட்டுவிட்டது. அதற்குள் பலகை கீழிறங்கிவிட அவன் அந்தரத்தில் தொங்கி இரண்டு மூன்று நிமிடங்களுக்குள் சவமாய் விட்டான்.

குமாரவேல் பிரபுவும் அவர் கூட்டாளிகளும் ஒன்பது மணிவரையி லிருந்து சவம் கீழிறங்கப்பட்ட பின்பே சென்றார்கள். கவர்னர் அக்கால வழக்கப்படி குரு, ஷெரிப் அவருடைய உத்தியோகஸ்தர்கள் இவர்களுக்கெல்லாம் விருந்தளித்தார்.

யாவரும் போஜனம் செய்துகொண்டிருக்கையில் கவர்னர் மற்றபேரை நோக்கி "பாபம் அந்தத் தெய்வயானை சீமாட்டி துக்கமடைவாள். தன் கணவன் எப்படியும் பூரணமாய் மன்னிக்கப்படுவது நிச்சயமென்றே அவள் ஐயமின்றி நம்பி யிருந்தாள். நேற்று மாலை அவள் தன் கணவனிடம் வந்து பேசியபோது அதைப்பற்றி எவ்வளவோ நிச்சயமாய்க்கூறித் தான் இன்று தன் கணவனைத் தன் வீட்டிற் கழைத்துச் செல்வதாய்க் கூறினாள். அவள் கூறிய உறுதி

மொழியால் இவன் மன்னிக்கப்படுவானென்றே நானும் நம்பினேன்.

குரு ஷெரிப்பை நோக்கி "நானும் அப்படியே நம்பியிருந்தேன். தாங்கள் காலையில் சிறைச்சாலை யறையிலிருந்து என்னை வெளியிலழைத்துத் தங்கள் ஜேபியிலிருந்த கடித உறையைக் காட்டியபோது நான் அது மன்னுப்புப் பத்திரமேயென்று பூரணமாய் நம்பியிருந்தேன்" என்றார்.

ஷெரிப்:—"ஆனால் நான் அதைப்பிரித்து அதிலுள்ள சமாசாரத்தை வாசித்தபோது எவ்வாறு திடுக்கிட்டேன் என்பதைத் தாங்கள் கவனித்திருக்கலாம்" என்றார்.

குரு நான் அவ்வளவாய்க் கவனிக்கவில்லை யென்றார்.

ஷெரிப் "ஆ நீங்கள் அதைப் பார்க்கவில்லையல்லவா?" என்றுகூறிக்கொண்டே தன்ஜேபியிலிருந்த பத்திரத்தை எடுத்து கவர்னர், தன் உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களை நோக்கி அலட்சியமாகவே அதை யவர்கள் முன் எறிந்தார். அவர்கள் ஆவலோடு அதை எடுத்து வாசித்தார்கள். அதில் கீழ்க்கண்டபடி யிருந்தது:—

"துரைத்தன உள்நாட்டுக் காரியதரிசியிட மிருந்து—நகர ஷெரிப்புக்கு—

ஐயா,

கொலைத்தண்டனை யடைந்த குற்றவாளிகளாகிய அயோக்கியர்கள் தூக்குமர மேடைமேல் நிறுத்தப்பட்டதே ஜனங்களை நோக்கி வீணானவையும் பொய்யுமான விஷயங்களை யெல்லாம் பிரசங்கம் செய்வதைத் தாம் கண்டேயிருப்பீர். அத்தகைய துர்வழக்கம் கொஞ்சகாலமாய் நகரில் அதிகரித்துவிட்டது. ஆகையால் குற்றவாளியைச் சிறைச்சாலையினின்று தூக்குமரத்திற்கு அழைத்துச் சென்றதும் அங்கு

நடக்கவேண்டிய சடங்குகளுக்கு அதிக அவகாசம் கொடாமல் மிக்க துரிதமாகவே தண்டனையை நிறைவேற்றி விடுவது உசிதமென்று கருதப்படுகிறது—''

இதை வாசித்ததும் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்து வியப்புற்றார்கள். ஆனால் தெய்வயானை தன் கணவனை மிக்க சாமார்த்தியமாய் ஏமாற்றி மோசம்செய்தாள் என்பது ஒருவர் மனதிலும் படவில்லை.

---

## 65 - வது அத்தியாயம்.

நாம் முன் கூறியபடி ஜெகதீசன் பருதிபுரத்திலுள்ள சிறைச்சாலையில் இரகசியமா யடைக்கப்பட்டு ஒரு மாதமாய்விட்டது. அவன் தன் பிரயாணச்சீட்டில் கள்ளப்பெயரைக் கொடுத்திருக்கிறான் என்ற சாக்கின்மேல் போலீஸ் பிரதம அதிகாரியால் அவ்வாறு சிறை செய்யப்பட்டிருக்கிறானென்றும் முன்னமே கூறியிருக்கிறோம். போலீஸ் அதிகாரி யவனைக்கேட்ட கேள்விகளாலும் அவன் வண்டியில் இரகசியமாய் அங்கு கொண்டு வரப்பட்ட மாதிரியாலும் தான் தாராளமாய்த் தன் மெய்ப்பெயரை வெளியிட்டது முட்டாள்தனமாய் விட்டதென்றும் தனக்கு நேர்ந்த இந்த விபத்திற்கு மூலகாரணம் யாரென்றும் அவன் மனதிற்பட்டது.

அவன் அடைக்கப்பட்ட சிறு அறையில் சாதாரணமான ஒரு மேஜை இரண்டு நாற்காலிகள் முதலியவைகளேயிருந்தன. அதில் ஒருபக்கம் இரண்டு சாளரங்களிருந்தன. அவை யிரண்டிலும் பலமான இருப்புக் கம்பிகளிருந்தன. அவை ஒரு இருண்ட முற்றத்தைப் பார்த்தபடி இருந்தன.

அம்முற்றம் மற்ற மூன்று பக்கங்களிலும் உயர்ந்த பலமான மதில் சுவர்களால் சூழப்பட்டிருந்தன. அம்முற்றம் சிறைச் சாலைக் கட்டிடத்தைச் சேர்ந்ததே. ஆகையால் அவ்வழி யாய் அங்கிருந்து தப்பித்துக்கொண்டு வெளிதாண்ட முடி யாதென்று ஜகதீசன் உணர்ந்து கொண்டான்.

அவன் அங்கு சிறை வைக்கப்பட்ட முதல்நாள் நடந்த சம்பவத்தைச் சுருக்கமாய்க் கூறுகிறோம். பகல் சுமார் ஒரு மணிக்குக் கடுகடுப்பாகிய முகத்தையுடைய வேலைக்காரன் ஒருவன் ஆகாரம் கொண்டுவந்து ஜகதீசன் முன்னிருக்கும் மேஜைமேல் வைத்துவிட்டு "அய்யா தினம் மூன்று முறை யிம்மாதிரியே தங்களுக் கன்னம் கொண்டுவருவது என் கடமை. சட்டத்திற்கு மீறுதபடி தாங்கள் கூறும் கட்டளை களை யெல்லாம் நான் நிறைவேற்றுவேன்" என்றான்.

அவனை யேதாவது கேட்டால் அவன் பதில் கூற மாட்டானென்றும் ஆதலால் அவனை யெதைப்பற்றி யேனும் கேட்பதே வியர்த்தமென்றும் அறிந்துகொண்ட ஜகதீசன் அவனிடம் ஒன்றுமே பேசவில்லை.

வேலைக்காரன் கடைசியில் திரும்பிச் செல்கையில் "தங் களுக்கு ஏதேனும் புத்தகங்கள், எழுது கருவிகள் வேண்டு மாயின் கொண்டுவந்து தருகிறேன்" என்றான்.

ஜகதீசன் கொஞ்சம் சந்தோஷத்தோடு "அப்படியே புத்தகங்களும் எழுது கருவிகளும் கொண்டுவா" என்றான்.

வேலைக்காரன் அவ்வாறே சென்று சற்று நேரத்திற் றிரும்பிவந்து ஏராளமான புத்தகங்களையும் கடிதம் மசி முத லிய எழுது கருவிகளையும் ஜகதீசனிட மளித்து விட்டு,

"அய்யா! தாங்கள் எவ்வளவு வேண்டுமாயினும் இங்கு வரையலாம். ஆனால் போலீஸ் பிரதம அதிகாரி பார்வை

யிடாமல் ஒன்றேனும் இதை விட்டு வெளித் தாண்ட லாகாது'' என்றான்.

அவன் சென்றதே ஜகதீசன் அப்புத்தகங்களைப் பார்வையிட்டபோது ''அடடா! இதென்ன? இவை யொரு வருடம் படித்தால்கூட முடியாவே. ஆயினும் நாம் இங்கு சொல்பகாலமே யிருப்போமென்பது இந்த வேலைக்காரனுக்கு எப்படித் தெரியும்? நாம் இதற்காக மூடத்தனமாய்க் கலவர மடையலாகாது'' என்று தன் மனதைத் தேற்றிக் கொண்டான்.

இரவு முன்போலவே போஜனமும் ஏராளமான ஓயின் வகைகளும் அனேகம் மெழுகு வத்திகளும் கொண்டுவந்து வைக்கப்பட்டன. அவன் பிரியப்பட்டிருந்தால் இரவு முழுதும் தீபம் எரித்துக்கொண்டே யிருந்திருக்கலாம். மறுநாட் காலை யப்படியே நல்ல காலைப் போஜனம் கொண்டுவரப் பட்டதும் அதை யுண்டதும் அறையைச் சுத்தம் செய்ய ஒரு கிழவி வந்ததால் ஜகதீசன் எழுந்துபோய், அறைக்கு வரும் வழியிலுள்ள நீண்ட இருண்ட நெருக்கமான வழியில் உலவிக்கொண்டிருந்தான். இதில் உலவ மட்டுமே அவனுக்குச் சிறைச்சாலை யதிகாரியால் அனுமதி யளிக்கப் பட்டிருந்தது.

இந்த ஒருநாள் சம்பவத்தால் ஜகதீசன் நிலைமையும், அவன் சிறைச்சாலையில் கடுமையாய் நடத்தப்படவில்லை யென்பதையும் உணர்ந்துகொள்ளலாம்.

ஆனால் அவன் மனம் மிக்க வியாகூலத்திலிருந்தது. ஏனெனில், தன் காதலியாகிய கோமளவல்லி நாம் அவளை யடியோடு மறந்துவிட்டோமென்று எங்கே எண்ணிக்கொள்வாளோ என்ற வருத்தம் ஒரு பக்கம். அவள் கடிதம் எழுதி

யிருப்பாளென்று தெரியும். ஆனால் போலீஸ் அதிகாரியைக் கேட்டால் ஒன்றும் வரவில்லையென்று கூறிவிட்டார். அது பொய்யென்று அவனுக்குத் தெரியும். இதனால் அவன் மனதிற்கு மிக்க வியாகூலமே.

அவன் மனோ வியாதியால் தேகசுகம் கெட்டுவிட்டது. ஒருநாள் இரவு சுமார் ஒன்பது மணிக்கு தன் மஞ்சத்தில் படுத்து நித்திரை போய்விட்டான். அவன் இனிமையான கனவு கண்டுகொண் டிருந்தான். அதன் மத்தியில் ஒரு அதிசயமான சத்தத்தைக் கேட்டு விழித்துக்கொண்டான். அதென்ன சத்தம் என்று கவனமாய்க் கேட்டபோது தன் அறையிலுள்ள ஒரு சுவரின் வெளிப்பக்கம் யாரோ துளை செய்யத் தோண்டுவதுபோல் தெரிந்தது. "ஓகோ நம் போல் யாரோ இன்னொரு சிறைபாளி தப்பித்துக்கொள்ளப் பிரயத்தனப்படுகிறான். அதே வழியாய் நாமும் தப்பித்துக் கொண்டு போகலாம் என்று கொஞ்சம் சந்தோஷ மடைந்து, சத்தம்கேட்குமிடத்தில் தட்டி யவனோடுபேசி நாமும் கூடிய உதவியைச்செய்யலாம்" என்றுகருதினான். ஆனால்மறுநிமிடம் "ஒருவேளை யவன் இது காலி யிடம் என்று நம்பி யிப்படிச் செய்யலாகும். ஆளிருப்பதை யறிந்து பயந்துகொண்டு தன் முயற்சியை யடியோடு விட்டுவிட்டாலும் விட்டு விடுவான். ஆகையால் அவன் துவாரம் செய்துகொண்டு இப்பக்கம் வந்த பிறகு நாம் அவனோடு கலந்துகொள்ளலாம். அதுதான் சரி" என்று இடிக்கும் சத்தத்தைக் கேட்டுக்கொண்டே நித்திரை போய்விட்டான்.

பொழுது விடிந்ததும் நித்திரை விட்டெழுந்த ஜகதீசன் "ஓகோ நாம் கேட்ட சத்தம்கூடக் கனவுதானோ" என்று அய்யப்பட்டான். அவன் எழுந்து தேகசுத்தி செய்து கொண்டு வேலையாள் வரவை எதிர் பார்த்துக்கொண் டிருந்

தான். அவ்வாறே சுமார் ஒன்பது மணிக்கு வேலைக்காரன் ஆகாரம் கொண்டுவந்தான். ஜகதீசன் அவனிடம் தந்திரமாய்ப் பேசி "இங்கு இன்னும் வேறு சிறையாட்கள் இருக்கிறார்களா" வென்று கேட்டான். வேலைக்காரன் அதைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது என்று கூறிவிட்டான். ஜகதீசன் நாம் இவனைக் கேட்டதே முட்டாள் தனம் என்று எண்ணிக்கொண்டான்.

வேலைக்காரன் காலைப் போஜனத்தை யளித்துத் திரும்பிச் சென்ற சற்று நேரத்திற்குள் வழக்கம்போல் அறையைச் சுத்தி செய்யும் கிழவி வந்தாள். அவள் அறையைச் சுத்தி செய்துகொண் டிருக்கும்போது ஜகதீசன் அங்கிருக்கும் இருண்ட நீண்ட தாழ்வாரத்தில் உலவச் சென்றான். இந்த விடத்தைப்பற்றி முன்னமே கூறி யிருக்கிறோம். அதன் கோடியில் மேல்மாடிக்கு ஏறிச் செல்லும்படி படிக்கட்டுகளிருக்கின்றன. அங்கு ஏறினால் அதிலிருந்து பத்து பனிரண்டு அறைகளுக்குச் செல்ல வழி யிருக்கிறது. ஜகதீசன் ஏதாவது சந்தடி கேட்கிறதா பார்ப்போம் என்று அங்கு நின்று ஒத்துக்கேட்டான். ஒரு சத்தமும் கேட்கவில்லை. அதற்குள் கிழவி வந்து அறை சுத்தி செய்யப்பட்டது என்றாள். அதன் அர்த்தம் இனி நீ யுன்னிடத்திற்குச் செல்லவேண்டியது என்பதே. அவ்வாறே யவன் தன் அறைக்குத் திரும்பும்போது அக்கிழவி ஜாக்கிரதையாய் அவசரத்தோடு அவன் கரத்தில் ஒரு கடிதத்தைக் கொடுத்துச் சென்றாள். அவன், கப்பலிலிருந்து கடலில் விழுந்தவன் கரத்தில் ஒருவர் வீசிய கயறு அகப்பட்டால் எப்படி யிருக்குமோ அத்தகைய உணர்ச்சியோடு ஆவலாய் அதை வாங்கிக்கொண்டு அறைக்குள் சென்றதே அங்கு காவலிருந்தவன் அறையைப் பூட்டிக்கொண்டு சென்றான்.

ஜகதீசன் அறையில் உட்கார்ந்து அக்கடிதத்தை வாசிக்கத் தொடங்கினான். அது ஒரு ஸ்திரீயின் கையால் எழுதப்பட்டது. ஆனால் அதில் கையொப்பமாவது மேல்விலாசமாவது கிடையாது. அதில் கீழ்க்கண்டபடி எழுதி யிருந்தது.

"என்போன்ற சிறையாளனே. நீ தப்பித்துக்கொள்ள வேண்டுமானால் அதற்காகவே பிரயத்தனப்படும் உன் போன்ற சிறையாளாகிய எனக்கு உதவிசெய். நீ யெதாவது அசாதாரண சத்தத்தைக் கேட்டால் பயமடைய வேண்டாம். இன்றிரவு ஏதேனும் அபூர்வ சத்தம் கேட்டாலும் கலவர மடையவேண்டாம். ஆனால் உன் செவிகளில் விழும் வேண்டுகோளின்படிச் செய்ய மட்டும் ஆயத்தமா யிரு. நீ இரத்தினபுரியானென்று கேள்விப்பட்டேன். நான் உன் சுயதேச ஆளேயென்று சந்தோஷ மடைவாயென வெண்ணுகிறேன்.

கடிதத்தால் அவள் நாணய மானவளென்றும் தைரியமும் துணிகாமு முடையவளென்றும் ஜகதீசன் அறிந்துகொண்டான். கிழவி யிவளுக்கு உளவென்றும் தெரிந்தது. இதுவே அவனுக்கு வியப்பா யிருந்தது. இம்மாது ஒரு அறையிலிருந்து இன்னொரு அறைக்குத் தாண்டிவிட்டால் அதனாலேயே எப்படி இதை விட்டுத் தப்பித்துக் கொண்டு போய்விடலாமென்று நினைக்கிறாள் என்பது பின்னும் மிக்க வியப்பா யிருந்தது. அவள் விவரம் கூறினால் நமக்கு யாவும் விளங்கும், இன்னும் சொல்ப முயற்சியால் சுவரைத் துளைத்துக்கொண்டு வந்துவிடலாமென்ற நிச்சயம் அவளுக்கு இருக்கவேண்டும் என்று சிந்தித்துக் கொண்டான்.

அன்று பொழுது மிக்க நீடித் திருந்ததுபோல் அவனுக்குத் தோன்றியது. கடைசியில் ஆதித்தன் மேற்கடலில் மறைந்து இரவு ஒன்பது மணி யானதும் வேலைக்காரன் ஆகாரம் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, போஜனமானதும் பாத்திரங்களை யெடுத்துக்கொண்டு கதவைப் பூட்டிக்கொண்டு சென்றான்.

ஜகதீசன் தன் மஞ்சத்தில் சயனித்துக்கொண்டு தனக்குக் கிடைத்த அந்த மர்மக் கடிதத்தின்படிச் சத்தம் உண்டாகிறதா வென்று எதிர் பார்த்துக்கொண் டிருந்தான். கடைசியில் பதினேரு மணிக்கு மேல் சுவர் இடிக்கப்படுவதும் கீழே விழும் கல் முதலியவை வாரப்படுவதுமாகிய சத்தம் கேட்டது. ஜகதீசன் உடனே எழுந்துபோய் அந்தவிடத்தில் நின்றுகொண்டு செவிகொடுத்துக் கேட்டான். சற்றுநோங் கழிந்தபின், சுவரின் மறுபுற மிருந்து அந்தப் பக்கம் மரம் இருக்கிறதோ வென்று ஸ்திரீயின் குரல் கேட்டது.

ஜகதீசன்:—ஆம் என்றான்.

அம்மாது:—"அப்படியாயின் நீ தப்பித்துக்கொண்டு போக வேண்டுமாயின் அல்லது எனக்காவது உதவி செய்ய வேண்டுமென்று விருப்பமிருந்தால் அம்மரத்தடைகளை யெடுக்க பாதி யுதவியாவது செய்" என்றாள்.

ஜகதீசன் உடனே அச்சுவரின் ஓரமா யிருந்த தன் மஞ்சத்தை யெடுத் தப்புறம் வைத்துவிட்டு அவள்கூறியபடி யுதவி செய்தான். கடைசியில் இரண்டடி சதுரமான துவாரம் புலப்பட்டது.

அதன் வழியாய் அம்மாது அவனை நோக்கி,

"இதோ இச்சாமான்களைத் துரிதமாய் எடுத்துக்கொள்" என்று கூறிக்கொண்டே ஒரு மூட்டையை அவனிடம்

விட்டெறிந்தாள். அதில் ஒரு கடப்பாரை, நூலேணி இரண்டு மூன்று அரங்கள், மஞ்சள் நிறமான ஒருவிதமான தைலம், சில கள்ளச் சாவிகள், இவைகளிருந்தன. ஆயினும், அவன் மனதில் எல்லாம் கலவரமும் அவசரமுமாயிருந்ததால் அவன் சரியாய்ச் சிந்திக்கச் சமயமில்லை. இவன் சாமான்களை யெடுத்துக்கொண்டதே அம்மாது "சரி இப்போது நான் உன்னறைக்கு வந்துசேர எனக்கு உதவி செய்" என்றாள்.

அவ்வாறு கூறிக்கொண்டே அம்மாது தன் இரு கால்களையும் நீட்டினாள். ஜகதீசன் உடனே யவளுக்கு உதவி செய்து அத்துவாரத்தின் வழியாய் அவள் தன் அறைக்குள் வந்து சேரும்படிச் செய்தான்.

அவள் அறையில் வந்து நிமிர்ந்து நின்றாள். அவள் முகம் பூரணமாய் ஒரு கறுப்புப் பட்டுமுக மூடியால் மூடப்பட்டிருந்தது. ஜகதீசன் வியப்புற்று நின்றான். அம்மாதே அவனை நோக்கி, "நான் இம்மாதிரி முகமூடி யணிந்துகொண்டிருப்பது உனக்கு வியப்பா யிருக்கிறதுபோற் காண்கிறது. அது ஒரு பிரதிக்கினை. அப்பிரதிக்கினை யற்பமானதாய் உனக்குத் தோன்றுமாயினும் எனக்கு அது பிரமாதமாகவே தோன்றுகிறது. அது மனமுடைந்துபோகும் சமயம் நேர்ந்ததால் நான் அப்படிச்செய்ய நேரிட்டது" என்றாள்.

ஜகதீசன் மனதில் மிக்க கலவரமும், "இவள் யார்? என்னமோ சூது விவகாரமாய் வந்தவள்போல் காண்கிறது" என்று மிக்க கலவர மடைந்து, "ஆயினும் இத்தகைய பிரதிக்கினை யேனோ?" என்றான்.

அம்:—"ஆ! நீ யென்னைப் பைத்தியக்காரி யென்று கருதிக்கொண்டாய். அந்தோ நான் படும் துக்க அனுபவத்

தால் உன் விஷயத்தில் நான் மிக்க இரக்கமுடையவளா யிருக்கிறேன். என் வனப்பே எனக்குப் பெரிய விரோதியாய்விட்டது. நான் நமது நாட்டு ஸ்திரீயாதலாலும் இந்த ஊரில் வந்து தனியே சிக்கிக் கொண்டதாலும் என் விஷயத்தில் யாருக்கும் பயமில்லை. இதனால் பரிதி புரத்திலுள்ள பிரபு மக்கள், செல்வந்தர்கள் புத்திரர்கள், போலீஸ் பிரதம அதிகாரி இவர்களெல்லாம் என்மேல் காதல்கொண்டு என்னைத் தொந்திரை செய்து கடைசியில் இத்தகைய யிக்கட்டில் கொண்டுவந்து விட்டார்கள்'' என்று மிக்க துயரத்தோடும் பரிதாபத்தோடும் கூறினள்.

ஜகதீசன் இவள் கூறிய யாவும் உண்மையென்றே நினைத்துக்கொண்டான். போலீஸ் அதிகாரியும் இந்த அக்கிரமத்தில் சம்பந்தப் பட்டானென்று அறிந்ததே மிக்க கோபமடைந்து "ஆகா! இத்தகைய அக்கிரமத்திற்காகவா உன்னையும் இங்கு சிறை வைத்திருக்கிறார்கள்?'' என்றான்.

அம்:—"ஆம். நிச்சயமாய் அதே காரணம். இவர்கள் சுமார் மூன்று வாரங்களுக்கு முன் என்னை யென் குடும்பத்தை விட்டுப் பிரித்து இங்கு கொண்டுவந்தபோது நான் அடைந்த துயரத்தால்"இனி எந்த ஆடவனுக்கும் என் முகத்தைக் காட்டுவதில்லை'' யென்று பிரதிக்கினை செய்துகொண்டது அதிசயமென்று இப்போது கருதுகிறாயா? ஆயினும் அப்பிரதிக்கினைக்கு ஒரு வரம்புவைத்திருக்கிறேன்; அதாவது 'எப்போது எந்த ஆடவனாவது என் வனப்பையும் என் செல்வம் அந்தஸ்து முதலியவைகளையும் கருதாமல் ஸ்திரீகளுக் கிருக்கவேண்டிய அரிய குணங்களில் சில குணங்களாவது என்னிடம் இருக்கின்றன வென்பதற்காகவே என்னைக் காதலிக்

கிறுன்' என்று உணருகிறேனே அதுகாறும் இப்பிரதிக் கனேயை விடுவதில்லேயெனத் தீர்மானித்திருக்கிறேன். இனி நாம் இதை விட்டுத் தப்பிப்போகும் வேலையைக் கவனிப்போம்'' என்ருள்.

ஜக:—''ஆம் ஆம். ஆயினும் ஒரு சங்கதிமட்டும் கூறவேண் டும்....'' என்பதற்குள்,

அம்:—''பொறு பொறு. முன்னே நாம் ஒருவரை யொரு வர் என்ன நாமத்தா லறிந்துகொள்வதென்று உணர் வோம்'' என்ருள்.

ஜக:—என் பெயர் ஜகதீசன்.

அம்மாது:—''என்பெயர் லலிதா'' என்ருள்.

ஜக:—''உன் எதிரிகள் உன் விஷயத்தில் இவ்வளவு குரூர மாய் நடப்பதால் நாம் இதைவிட்டு தப்பித்துக்கொண் டதே நீ வீடுசேரும் மட்டும் நான் துணையாய் வரு கிறேன்'' என்ருன்.

அம்மாது தன் பெயர் லலிதா என்று கூறியவரையில் நாமும் அவ்வாறே யழைப்போம்

லலிதா:—''மிக்க சந்தோஷத்தோடு உன் உதவியை யொப் புக்கொள்ளுகிறேன். இனி நம் வேலையைப் பற்றிச் சுறுசுறுப்பாய்க் கவனிப்போம்'' என்ருள்.

ஜக:—''இனி நடந்துகொள்ள வேண்டியதைப் பற்றி யுனக் குள் ஏதேனும் தீர்மானமான ஏற்பாடு செய்துகொண் டிருக்கிருயோ? என்று கேட்டான்.

லலிதா:—இந்த விடம் முழுதும் எனக்கு நன்ருய்த் தெரி யும். உன்னிடம் கடிதம் கொடுத்த கிழவிக்கு நல்ல பணம் அளித்த பிறகு அவளே யெனக்கு எல்லா உத வியும் செய்தாள். அவளே யென்னைச் சாளரவழியாய்

என் அறையிலிருந்து தப்பி வரும்படிச் செய்தாள். அவளே இச்சாமான்களை யெல்லாம் வாங்கி வந்து கொடுத்தாள். இந்த அறைக்கு வெளியிலிருக்கும் முற்றத்தில் ஒருவரும் காவலில்லை. ஆகையால் நாம் மட்டும் கொஞ்சம் தைரியத்தோடு வேலை செய்தால் கஷ்டமின்றி இதைவிட்டு வெளி தாண்டிவிடலாம்.

ஜக:—நாம் இச்சாளரத்தின் கம்பிகளை இராவி அவற்றைக் கழற்றிவிட்டு நூலேணி வழியாய் முற்றத்தில் இறங்கி விட வேண்டுமென்று கருதுகிறேன்.

லலிதா:—அதுவே யென் யோசனை.

ஜக:—இந்த மஞ்சள்நிறத் திராவகம் என்ன?

லலிதா:—"இதைத் தடவினால் இரும்பு மிருதுவாய்விடும்" என்றாள்.

இவர்கள் பேசிக்கொண் டிருக்கையில் சாளரத்தின் வழியாய்த் தீபவொளியைக் கண்ட வெளியிலிருந்த பாராக் காரன் "ஓ! உடனே தீபத்தை யணைத்துவிட்டுக் கதவை மூடிக்கொள். இது சந்தேகத்திற் கிடம். நான் கூறியபடி செய்யாவிட்டால் நான் பிரதம அதிகாரியிடம் கூறுவேன்" என்றான்.

ஜக:—"ஓகோ! மோசமாய்விட்டது. நமது முயற்சி யடியோடு நாசமாய்விட்டது" என்றான்.

லலிதா:—"இல்லை யில்லை. நான் அக்கிழவி மூலமாய் நாளைக்குப் பாராக்காரன் இப்பக்கம் வருகிற வேளையைத் தெரிந்து கொள்கிறேன்" என்றாள்.

இப்போது இவர்களிருவரும் அந்த இரவில் அவ்வறையில் தனியாயிருக்க வேண்டியதாயிற்று. அம்மாது தன்ன

லான வரையில் நமது ஜகதீசனை மயக்க முயன்றும், அவனுக்குக் கோமளவல்லியின் மேலிருந்த உறுதியான காதலால் அவன் தவறான நெறியில் திரும்பவில்லை. ஆயினும் இரவு முழுதும் இருவரும் அந்த அறைக்குள் இருட்டில் இருக்கவேண்டியதாயிற்று.

* * * *

இப்போது நாம் இவர்களை யிச் சிறை கூடத்திலேயே விட்டு விட்டு இரத்னபுரி நகரில் நடக்கும் சில சம்பவங்களைக் கவனிப்போம்.

வேலப்பனிடம் கள்ளப் பத்திரம் எழுதிக்கொடுத்த கர்னல் மாரப்பன் பிறகு எழுதிக்கொடுத்த கடன் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு அவன் கடன்காரர் சிறைச்சாலையில் வைக்கப்பட்டான். அப்போது அவன் தனக்கு நண்பர்களாயிருந்த செல்வந்தர்கள் புத்திரர்களாகிய வாலிபர்களுக்கெல்லாம் தனக்கு இச்சமயம் உதவி செய்யும்படி கடிதம் எழுதினான். ஒருவரும் பதிலே எழுதவில்லை. குமாரவேல் பிரபுவின் மனைவிக்கு மிக்க உருக்கமான கடிதம் எழுதினான். அவள், மேல் விலாசத்திலிருந்த கையெழுத்தாலேயே அது இவனிட மிருந்து வந்ததென்றறிந்து அதைப் பிரிக்காமலே திருப்பி யனுப்பிவிட்டாள்.

மாரப்பன் மிக்க கலவரமான நிலைமையிலிருந்தான். அக்காலத்தில் அந்நாட்டில் கடன் சிறை மிக்க நிர்ப்பந்தமானதல்ல. சிறையிலிருப்போனிடம் கையில் பணம் மட்டும் இருந்துவிட்டால் சகல சுதந்திரங்களையும் அவன் அனுபவிக்கலாம். சாதாரணமாகவே பிரியமான அவன் நண்பர்கள் அவனிடம் வரலாம், பேசலாம், கூடவிருந் துண்ணலாம், எல்லாம் செய்யலாம். அவனும் பணம் கொடுத்துப்

SCO CSA

பிரியமான எப்பண்டங்களையும் வரவழைத்துப் புசிக்கலாம். அதற்கு வேண்டிய யாவும் சிறைச்சாலையிலுள்ள ஆட்களே கூலிக்குச் செய்வார்கள்.

ஒருநாள் சிறைச்சாலைக் காவலரில் ஒருவன் மாரப்பனிடம் வந்து, "அய்யா! யாரோ ஒருவர் தங்களைக் காண வந்திருக்கிறார்" என்றான்.

மாரப்பன் அவரை யுள்ளே யழைத்துவா என்றான். சற்று நேரத்திற்குள் சற்று குட்டையான ஒரு மனிதன் மாரப்பன் முன் வந்து நின்று மரியாதையோடு வந்தனமளித்தான். அவன் உருவமோ பார்ப்போர் சற்றும் பிரியப்படக் கூடியதல்ல. உடைகளையும் அவன் நிலைமையையும் கண்ட எவரும் அவனை நம்பி ஐந்து ரூபாய்கூட ஒரு நாளைக்குக் கடன் கொடுக்கமாட்டார்கள்.

அம்மனிதன்:—"ஆ கர்னல் மாரப்பரே! கடைசியில் தாங்களும் சிக்கிக்கொண்டதுபோ லிருக்கிறது" என்றான்.

மாரப்:—தாங்கள் என்னை யறிந்திருப்பதாய்க் காண்கிறது. ஆனால் தாங்கள் யாரென்று எனக்குத் தெரியவில்லை" யென்றான்.

அம்மனி:—"ஆம். பெயரால் தாங்கள் யாரென்று நான் அறிவேன். என் பெயர் ஜாமீன் சுப்பன் என்று கூறுவார்கள். தாங்கள் இங்கு வைக்கப்பட்டிருப்பதை யறிந்த பிறகு நான் தங்களைக் காணவேண்டியே இங்கு வந்தேன். தங்களுக்கு உதவி செய்யாமல் இன்னும் ஆலசியம் செய்யலாகாதென்பது என் கருத்து" என்றான்.

இம்மொழிகளைக் கேட்ட மாரப்பன் மிக்க சந்தேகமும் வியப்பு மடைந்து "தங்களுக்கு மிக்க வந்தனம். ஆயினும் தாங்கள் எனக்கு என்ன உதவி செய்யக்கூடுமோ எனக்குத் தெரியவில்லை" என்றான்.

186544

# மாதவி மாதவன் அல்லது

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

## (2 - பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் காடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பி து; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

# அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவி யும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின் றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மன மகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இராஜாமணி

அல்லது

## ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் சயல்களையுடைய ஒரு மூரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர் ரிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் அவனை பன்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி பிள்ளை, ணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் .ப்போர் மனத்தைக் கவரக்கூடியனவாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# "ஆனந்தபோதினி"

## ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 64 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பிநாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0 மாதிரிக்காப்பி இனாம்.

### ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | ரூ. | அ. | | ரூபா | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் ... | 4 | 0 | தினகரசுந்தரி | 1 | 0 |
| பவளத்தீவு 2-பாகமும் ... | 3 | 0 | தபால்கொள்ளைக்காரர் | 0 | 14 |
| கற்கோட்டை ... | 2 | 0 | ரத்தினாபாய் ... | 1 | 12 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | வீரநாதன் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| கனகபூஷணம் 2 பாகம் ... | 3 | 8 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 |
| இராஜாமணி ... | 2 | 0 | கமலசேகரன் ... | 1 | 12 |
| ஆனந்தலிங் ... | 2 | 0 | பூங்கோதை ... | 0 | 10 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ... | 9 | 10 | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| | | | மதனாம்பாள் 2 பாகமும் | 3 | 0 |
| | | | லோகநாயகி | 1 | 0 |

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.